பாலர் கல்வி

தொகுதி 5 | 1941 ௵ பிப்ரவரி ௴ விக்கிரம ௵ மாசி ௴ | பகுதி 11

சாரணீயம்—அதன் உண்மையும் முறையும்-12

(405 ஆம் பக்கத் தொடர்ச்சி)

S. ஸ்ரீனிவாசன் ; உயர்பாடசாலை, செங்கம்

இரண்டாம் பாகம்—சாரணமுறை

14. முதல்வன், உதவிநியமித்தல்; ஆறுகள் அமைத்தல்.

அணிவகுப்பு முறையைப்பற்றி முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. அணிவகுப்பு முறை சாரண திட்டத்தின் அஸ்திவாரம். இதுவரையில், அதாவது 10, 15, தினங்களாகப் பிள்ளைகள் அணிவகுப்பின்றி ஒரே கூட்டமாய் எல்லா ஆட்டம் பாட்டங்களிலும் கலந்துவந்தனர். 'ஆகேலா' எல்லாவற்றிலும் தலைமை வகித்து நடத்திவந்தார். ஆனால் இப்போது பிள்ளைகளுக்கு சில புதிய அனுபவங்களை உணர்த்த வேண்டும். சாரண திட்டத்தின் சில நடவடிக்கைகளில் அவர்களைப் பழக்கவேண்டும். விளையாட்டோடு வினையும் கலக்கவேண்டும். ஆகேலா எப்போதும், எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ள முடியாது. அப்படிச் செய்வதானால் அவருக்குப் பல விஷயங்களைப்பற்றி ஆலோசிக்க நேரமிருக்காது. ஆகையால் அவர் தன் பொறுப்பின் சிறிது பாகத்தை சாமர்த்தியமுள்ள சில பிள்ளைகளுக்குப் பகிர்ந்துகொடுத்து அவர்களுடைய நிர்வாகத்திறமையை விருத்தி செய்யலாம். ஆகேலா சில சமயங்களில் வேறு வேலையாகப் போகும்படி இருக்கும். அப்போது அப்பிள்ளைகள் அவருக்குப் பதிலாக இருந்து காரியங்களைக் கவனிக்கலாம். அல்லது அவர் இருக்கும்போது கூட அவருக்கு உதவியகாவும் இருக்கலாம். குடும்ப வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும், பிரமாதமான பொறுப்புகளை ஏற்கும் காலம் பிள்ளைகளை நோக்கி

வந்துகொண்டிருக்கிறது. அதற்கு அவர்களைத் தயாரிப்பது சாரணீயத்தின் நோக்கங்களில் ஒன்று.

சிங்கக்குட்டி நிரையை சாதாரணமாய் 24 பேர்களைக்கொண்டு ஆரம்பிப்பது உத்தமம் என்று ஏற்கனவே சொன்னேன். இவர்களை நான்கு அணிகளாக வகுத்து ஒவ்வொரு அணியையும் ஒரு 'ஆறு' என்று அழைக்கவேண்டும். ஒவ்வொரு ஆறுக்கும் ஒரு முதல்வன் வேண்டும். முதல்வர்களை நியமிப்பது ஆகேலாவின் கடமை. இதில் ஆகேலா எச்சரிக்கையாயிருக்கவேண்டும். பிள்ளைகளோடு இதுவரையில் பழகியதிலிருந்து 'முதல்வன்' 'உதவி' இப்பதவிகளுக்குத் தகுந்த பிள்ளைகள் யார் என்பதை அவர் நன்கு தெரிந்துகொண்டிருக்கவேண்டும். முதல்வன், உதவி—இவர்களை நியமிக்கப்போவதாக சில தினங்களுக்கு முன்பே ஆகேலா சிறுவர்களுக்குச் சொல்லி வைப்பது நல்லது. அதற்காக, பிள்ளைகளின் நடத்தைகளையும், செயல்களையும் தான் கவனித்து வருவதாகச் சொல்லவேண்டியதில்லை. தினத்தைமட்டும் குறிப்பிட்டால் போதும். அன்று முதல்வர்களும், உதவிகளும் நியமிக்கப்படுவதோடு பிள்ளைகளும் ஆறுகளாக வகுக்கப்படுவர் என்றும், ஒவ்வொரு ஆறுக்கும் யார் யாரைச் சேர்த்துக்கொள்வது என்பதை முதல்வர்களே தீர்மானிக்கவேண்டுமென்றும் பொதுக்கூட்டத்தில் பிள்ளைகளோடு கலந்து பேசவேண்டும்.

முதல்வனை நியமிப்பதில் ஆகேலா கவனிக்கவேண்டியவை :—

(1) அவன் வயதில் மற்றவர்களைவிட முதிர்ந்தவனாயிருத்தல் உத்தமம்.

(2) நல்ல நடத்தையும் பழக்கமும் உள்ளவனாயிருக்கவேண்டும்.

(3) மற்ற பிள்ளைகளை நேசப்பான்மையாலும், சாதுர்யத்தினாலும் வசியப்படுத்தக்கூடியவனா யிருக்கவேண்டும்.

(4) சுறு சுறுப்புள்ளவனா யிருக்கவேண்டும்.

முதல்வர்களை நியமித்தானதும் அவர்களோடு சிறிது அவர்கள் கடமைகளைப் பற்றிப் பேசவேண்டும். பிறகு முதல்வர்கள் தங்கள் இஷ்டப்படி ஒவ்வொருவரும் ஒரு உதவியை ஆய்ந்துகொள்ள விட்டுவிடவேண்டும். இந்த முக்கியமான வேலை முடிந்ததும் முதல்வர்களும் உதவிகளும் சிறிது நேரம் ஆலோசித்து, மீதி பிள்ளைகளைத் தங்களுக்குள் பகிர்ந்துகொள்ளவேண்டும். இதில் சிறிது சிக்கல் ஏற்படும். முதல்வர்களுக்குள் யார் யாரைத் தங்கள் அணிக்கு எடுத்துக்கொள்வதென்பதைப் பற்றி முறண்படுவது இயற்கை. இதில் ஆகேலா அவசியமிருந்தாலொழிய தலையிடக் கூடாது. முதல்வர்கள் தங்களுக்குள்ளேயே எல்லா தகராறுகளையும் தீர்த்துக்கொள்ளும்படி விட்டுவிடுவதுதான் நலம். ஆனால் ஓரளவுவரைக்குமே. முறண்பாடு தீராமல் சச்சரவில் முடியுமானால், அப்போதும் ஆகேலா சும்மாயிருக்கக்கூடாது. உடனே தலையிட்டுத்

தன் தீர்ப்பைக் கொடுத்துவிடவேண்டும். அப்படிச் செய்வதில் கூடிய வரையில் எல்லா முதல்வர்களுக்கும் திருப்தியுண்டாகும்படிப் பார்த்துக் கொள்வது அவசியம்.

பிள்ளைகளை ஆறுகளாகப் பிரிக்கும்போது, ஒரு ஆறின் உறுப்பினெரெல்லாம் ஒரே ஊரைச் சேர்ந்தவர்களாயிருத்தல் உத்தமம். அப்போது தான் ஒவ்வொரு ஆறும் ஒன்றி ஒத்துமையாக வேலை செய்ய முடியும்.

15. முதல்வன் கடமைகளும் பொறுப்புகளும்:—முதல்வர்களிடம் கடமைகளையும் பொறுப்புகளையும் ஒப்படைப்பதில் பல நுண்ணிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. அவை மனோதத்துவ பூர்வமானவை. எவ்வளவு நன்மையுண்டோ அவ்வளவு தீமைக்கும் அதில் இடமுண்டு. ஆகையால் இதை மிக்க சாமர்த்தியத்துடனும், பால சுபாவத்தையறிந்தும் செய்யவேண்டும். இதில் சில எச்சரிக்கைகளை ஆகேலா மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்:—

(1) ஆகேலா தன் பொறுப்பனைத்தையும் முதல்வனிடம் ஒப்படைப்பது பெரிய தவறு. இதற்கு அவன் தன் வயதாலும், அனுபவத்தாலும் தகுதியற்றவன்.

(2) முதல்வனை கூடியவரையில் ஆறில் ஒருவனாகவே மதிக்க வேண்டும். அவனும் தன்னை அவ்வாறே எண்ணும்படி ஆகேலா நடந்து கொள்ள வேண்டும்.

(3) ஆறிலுள்ள உறுப்புகளின் குணதோஷங்களைப் பற்றி முதல்வனிடம் ஆகேலா அபிப்பிராயம் கேட்கக்கூடாது.

(4) ஆறுகளின் உறுப்பினருக்கு தண்டனை விதிக்கும் அதிகாரமும் அவனிடம் கொடுக்கக் கூடாது.

(5) சாரண திட்டத்தின் கீழ் அல்லாத எந்த பிரத்தியேக சலுகையையும் அவனுக்குக் காட்டக்கூடாது.

முதல்வன் கடமைகள்:—

(1) சிங்கக் குட்டிகள் உடலிலும் உடையிலும் சுத்தமாயிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

(2) தன் ஆறைச் சேர்ந்த பொருள்கள்—பெட்டி, உடுப்பு, விருதுகள், விளையாட்டுச் சாமான்கள், குறிப்புகள், சேகரங்கள் இவைகளைக் காப்பாற்றி வைத்திருத்தல்.

(3) இரண்டாந்தர, முதல்தர சிங்கக் குட்டிகளாவதற்குப் பிள்ளைகளை அவைகளுக்குரிய சோதனைகளில் தேரப்பழக்குவது.

(4) பிள்ளைகளை விளையாடு மிடங்களுக்கும், கூட்டங்களுக்கும் ஒழுங்காக அழைத்துச் செல்லுதல்.

(5) விளையாட்டுகளுக்கு வேண்டிய பொருள்களைத் தயாரிப்பது.

(6) முன் தயாரிப்புகளிலும், ஏற்பாட்டுகளிலும் அவரவர்கள் செய்யவேண்டியதைக் குறிப்பிடுவது.

(7) தன் தலைமையிலுள்ள ஆறின் நடவடிக்கைகளையும், உறுப்பினரின் செயல்களையும் குறித்து வைப்பது.

(8) தவறி நடப்பவர்களை ஆகேலாவிடம் அறிவிப்பது.

இந்த ஜாப்தாவில் முதல்வன் வேலைகளெல்லாம் அடங்கிவிட்டதாக அர்த்தமில்லை. பல குழந்தைகளுள்ள ஒரு குடும்பத்தில் மூத்தபிள்ளைத் தன் தாய்க்கு என்னென்ன விதத்தில் உதவியாயிருப்பானோ அதேவிதமாக சிங்கக்குட்டிக் குடும்பத்தில் முதல்வன் ஆகேலாவுக்குத் தன்னாலானமட்டும், அவர்கட்கு திட்டங்களுக்கடங்கி உதவிசெய்ய வேண்டும். இதற்காக ஆகேலா அடிக்கடி முதல்வர்களையும், உதவிகளையும் தனியாகக் கூட்டி அவர்களுக்குத் தங்கள் வேலைகளைச் சரிவர செய்யும் வழிகளைத் தெளிவுபடக் கற்பிக்கவேண்டும். இதில் ஆகேலா முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை :

(1) முதல்வனுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்து அவனை 'மண்டைக்கொழுத்தவ'னாக்கிவிடக் கூடாது.

(2) அதிக வேலையை அல்லது பொறுப்பைக் கொடுத்து 'பிஞ்சில் பழுக்க' வைக்கக் கூடாது.

இவ்விரண்டு ஆபத்திலிருந்தும் அவனைக் காப்பது ஆகேலாவின் நுண்ணிய கடமையாகும். இதில் அவர் தவறினால் எல்லாவற்றிலும் தவறியதாகும்.

சின்னஞ் சூட்டும்போது, முதல்வர்களுக்கும் உதவிகளுக்கும் அவர்கள் பதவிக் கடையாளமாக ஏதாவது குறி அல்லது முத்திரையை அவர்களுக்குச் சூட்டுவது அவர்களுக்கு உத்சாகத்தை ஊட்டுவதோடு அப்பதவிகளுக்கும் மதிப்பு உண்டாகும். ஆறுகளுக்குப் பேர்கொடுப்பது, அவைகளுக்குத் தனித் தனியாக ஒரு நிறம் அளிப்பது, விளையாட்டு திட்டம் போடுவது, வெளியிடங்களுக்குப் போவது, பரிசுகள் வழங்குவது போன்ற காரியங்களில் முதல்வன், உதவி இவர்களை வைத்துக்கொண்டு யோசித்துச் செய்யவேண்டும். அச்சந்தர்ப்பங்களில் அவர்கள் தங்கள் எண்ணங்களையும் கருத்துகளையும் தாராளமாய்ச் சொல்லிக்கொள்ள இடங்கொடுக்கவேண்டும். ஆனால் எதிலும் முடிவு கட்டுவதை ஆகேலா தன் அதிகாரத்திலேயே வைத்துக்கொள்ள வேண்டும். முதல்வர்களும், உதவிகளும் சிங்கக்குட்டிகளை மேல் தரங்களுக்குத் தயாரிக்கும் வேலையை ஆகேலாவின் முன்னிலையிலேயே அவர் மேற்பார்வையில் செய்யவேண்டும். 'முற்றும் அறிந்த' முதல்வன் என்பது இந்த வயதில் அசாத்தியம். ஆகையால் ஆகேலா சிங்கக்குட்டிகளுக்குக் கற்பிக்கும் வேலையை, தனக்குப்பதிலாக அவன் செய்யும்படி விட்டுவிடக் கூடாது.

முதல்வனும், உதவியும் தங்கள் கடமைகளைச் செய்யவும், மற்ற சிங்கக்குட்டிகளுக்குக் கற்பிக்கவும் கூடிய நிலைமையில் இருக்கவேண்டும்.

இதற்காக அவர்கள் மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் சற்று முன்னேறி யிருப்பது அவசியம். ஆகேலா அவர்களை அடிக்கடி கூட்டிப் பல சோதனை களிலும் அவர்களுக்குப் பிரத்தியேகப் பயிற்சி யளிக்கவேண்டும்.

16. கத்துக்குட்டி 'சோதனைகள்'

கத்துக்குட்டிகளாவதற்கு சாரணதிட்டத்தில் ஏற்பட்டிருக்கும் சோதனைகளில் சிறுவர்கள் தேரவேண்டும். விளையாட்டு, கூத்து, பாட்டு இவைகள் பிள்ளைகளின் இயற்கையுரிமை. இவைகளில் அவர்களைப் பரீட் சைப்பார்க்க வேண்டியதில்லை. ஆனால் சிறுவர்களின் இயற்கைச்சக்திகளை சமூக உபயோகத்துக்காகத் திட்டி பளபளப் புறும்படி செய்ய, சாரண திட்டத்தில் பல சோதனைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவை களில் தேரி, அதற்கறிகுறியாகச் சில சின்னங்களை சிறுவர்கள் அணிய ஆசைப்படுவார்கள். பொதுவாகவே, சாரணர்களுக்குப் பல சின்னங் கள் உண்டு. இவைகளைப்பற்றி பின்னால் சொல்லப்படும். சோதனைக ளில் தேரி, கத்துக்குட்டிகளாகும் வரையில் சிறுவர்கள் அச்சின்னங்களை அணியக் கூடாது. பிள்ளைகளுக்குத் தங்களை சிங்காரித்துக் கொள்வதி லும், புதிய பொருள்களைத் தங்களுக்கென சம்பாதித்து சேகரித்து வைத்துக்கொள்வதிலும் பெரிய ஆசை உண்டு. இந்த ஆர்வத்தை ஈடு செய்துகொள்ள அவர்களுக்கு விரைவில் ஒரு சந்தர்ப்பத்தை யளிக்க வேண்டும். அதுதான் சின்னஞ் சூட்டல். பெண்களுக்குப் பூச்சூட்டல் என்று ஒரு வைபவம் உண்டு. அன்று அவர்கள் தலை நிறைய பூ வைத் துப் பின்னிக்கொண்டு, தங்களை அழகுபடுத்திக் கொள்வார்கள். சிங்கக் குட்டிகளுக்கும் ஒரு சூட்டல் திருநாள் உண்டு. அப்போது அவர்கள் சில புதிய சீர்களைப் பெறுவதல்லாமல், "நாம் பலர் முன்னிலையில் அவர் கள் அங்கீகாரம் பெற்று ஒரு சிறந்த சமாஜத்தைச் சேர்ந்தோம்" என் னும் பெருமையையும் அடைகிறார்கள்.

கத்துக்குட்டிகளின் சோதனை இருவகைப்படும் அவை:—

1. திரள் சோதனை
2. தனிச் சோதனை

திரள் சோதனைகளாவன:—(1) திரள் கவாத்து. (2) நிரை கூடல். (3) சிம்ம கர்ச்சனை.

தனிச் சோதனைகளாவன:—(1) வாக்குறுதி செய்தல் (2) வணக் கம். (3) தேக சுத்தம்.

இவைகள் சுலபமானவை. பிள்ளைகள் சுயேச்சையாய் விளையா டும் விளையாட்டுக்களைப் போலவே இவைகளையும் விருப்பத்தோடும் உத் சாகத்தோடும் செய்வார்கள். ஆனால் இவைகளைக் கற்பிக்கும்போது ஒழுங்காகவும், திருத்தமாகவும், கண்டிப்பாகவும் கற்பிக்க வேண்டும். இவைகளை ஒழுங்கீனமாகச் செய்யும்படி விட்டுவிட்டால், சிறுவர்களுக்கு அவைகளிடத்தில் மதிப்பற்றுப் போகும். சாரமற்ற கேலிக்கூத்தாய் விடும். இனி சோதனைகளைக் கவனிப்போம். (தொடரும்)

உடற்கல்வி அன்றும் இன்றும்

By T. S. Muthuswami, *Physical Director, E. R. High School, Trichy*

மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் அடையவேண்டிய செல்வங்களில் கல்விச் செல்வமும் ஒன்றாகும். இச் செல்வத்தை அடைவதற்கு முக்கியமாக உள்ளது உடல் வலிமை. சுவரை வைத்துக்கொண்டு தான் சித்திரம் எழுதவேண்டும். உடல் வலிமையைப் பெறாத இளைஞர்கள் நல்ல கல்வியை அடையமுடியாது. இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டே **" A sound mind in a sound body** என்ற முதியோர் வாக்கு வழங்குகிறது.

உடற் கல்வியானது பொதுக் கல்வியில் ஒரு அம்சமே. கல்வியானது வாழ்க்கைக்கு உபயோகப்படவேண்டுமானால், அஃது உடற் கல்வியை அடிப்படையாகக் கொண்டதாகத்தான் இருக்கவேண்டும்.

உடற் கல்வியானது நோயற்ற வாழ்வைக் கொடுக்கமட்டும் உபயோகம் **(Health Measure)** என்று ஒரு சிலர் நினைக்கிறார்கள் ; மற்றும் சிலர் கேவலம் தசையை வளர்ப்பதற்குமட்டும் உபயோகப்படக்கூடியதெனக் கருதுகிறார்கள். வேறு சிலர் சாதாரண வாழ்க்கையில் உடற் கல்வியால் பிரயோஜனமில்லை யென்றும், இஃது யுத்தப்பயிற்சியின் ஒரு பாகம் என்றும் கருதுகிறார்கள். பின்னுமொரு சாரார் ஒருவனது திறமையைக் காண்பிப்பதற்குமட்டும் இக் கல்வி அவசியமானது என்று எண்ணுகிறார்கள். ஆனால் உண்மையை ஆராயுமிடத்து மேற் கூறிய எல்லா விஷயங்களும் சேர்ந்து உடற்கல்வியின் நோக்கங்கள் ஆகும்.

உடற்பயிற்சியானது புராதன இந்தியாவில் தொன்றுதொட்டு வாழ்க்கைமுறையின் அம்சமாக இருந்தது. பிறகு நாளடைவில் பொதுவாக வாழ்க்கைமுறையில் இது கவனிக்கப்படாமல் போனதால், பள்ளிக்கூடத்தில் ஒரு முக்கியமாகச் சேர்க்கவேண்டிய அவசியம் சமீப காலத்தில் ஏற்பட்டது.

என் அவசியம் :—இயற்கையான, உடம்பிலுள்ள ஒவ்வொரு அவயவமும் அதனுடைய வேலையைச் சரிவரச் செய்யவேண்டுமானால், அதற்கு வேலை கொடுக்கவேண்டும். இல்லாவிடில் நாளடைவில் அந்த அவயவம் வேலை செய்யும் தன்மை குறைந்து கடைசியில் வேலை செய்யவே தகுதியற்றதாக ஆகிவிடும்.

வீட்டிலுள்ள சிறு குழந்தைகள் தாமாகவே கையையும் காலையும் ஆட்டிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் அவைகளின் தசைகளுக்கு

வேலை கொடுக்கின்றன. நடக்கும் திறமை வந்தவுடன் மற்ற குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடி சரீர வளர்ச்சியையும், மன உற்சாகத்தையும் அடைகின்றன இம்மாதிரி வளரும் குழந்தைகளை அதிகப் பிரியமாக வளர்க்கும் பெற்றோர்கள் அவர்களை இயற்கையாக வளரவிடுவதில்லை. விளையாட விடாமல் வீட்டிற்குள் நல்ல பிள்ளைகளாக இருக்கும்படிப் பழக்குகிறார்கள். இக் குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் பாடதிட்டம், காலவரை இவைகளுக்குக் கட்டுப்பட்டு எழுதப்படிக்கப் மாத்திரம் கற்றுக்கொள்ளுகின்றனர். இப்பாடதிட்டத்தின்படி பள்ளியில் கல்விபயிலும் குழந்தைகளுக்கு விளையாடுவதற்குப் போதுமான ஊக்கம், அவகாசம், வசதி முதலியன கிடைப்பதில்லை. இதனால் குழந்தைகளின் இயற்கை வளர்ச்சி குன்றிவிடுகிறது. இயற்கை வளர்ச்சிக்கு உபயோகப்படவேண்டிய சக்துக்கள் செயற்கை வளர்ச்சிக்கு உபயோகப் படுகின்றன.

புராதன இந்தியாவில் உடற்கல்விக்கு விசேஷ கவனம் செலுத்தப் பட்டது. கல்விமுறை என்று தனிப்பட்ட பெயர் இல்லாவிட்டாலும், உடற்பயிற்சியை ஒரு கட்டாய வழக்கமாகத் தினசரி வாழ்க்கையில் அநுசரித்து வந்தார்கள். இம்முறையில் அதிகச் சிரத்தை காட்டித் தேர்ச்சி பெற்றவர்கள் க்ஷத்திரியர்கள். இவர்களிடம் அரசுரிமையும், தேசப் பாதுகாப்பும் ஒப்புவிக்கப்பட்டிருந்ததால் உடற்பயிற்சியை மிகவும் அவசியமாகக்கொண்டார்கள். க்ஷத்திரியர்கள் சில விசேஷகாலங்களில் தம் திறமையைக் காட்டுவதற்கு உடற்பயிற்சியில் போட்டிப்பந்தய விளையாட்டுக்களையும் நடத்திவந்தார்கள். இவர்கள் யுத்தங்களுக்காக யானையேற்றம், குதிரை யேற்றம், மல்யுத்தம் (**Wrestling**), முஷ்டியுத்தம் (**Boxing**), வாள்விற்தை, வில்வித்தை முதலியவைகளை வெகு முக்கியமாகப் பயின்றார்கள். யுத்த அரங்கங்களுக்குச் செல்வதற்காக அணிவகுத்து நடத்தல் (**Marching**) பயிலுவிக்கப்பட்டன. நீந்துதலிலும் **Swimming**) இவர்கள் அதிக ஊக்கங்காட்டி வந்தார்கள்.

பொதுவாகக் குழந்தைகளுக்குக் கண்ணாமூச்சி (**Hide and Seek**), ஏற்றேற்று மாமா (**See Saw**) கல்லா மண்ணா முதலிய விளையாட்டுகளும், அடுத்தபடியாக வயதுவந்த குழந்தைகளுக்குப் பிள்ளையார் பந்து, மரக்குரங்கு, சபல் குடுகுடு முதலிய விளையாட்டுகளும், பிறகு கிளித்தட்டு, கொக்கோ முதலியவைகளும் ஏற்படுத்தப்பட்டு, தனிப்பட்ட ஆசிரியரின் கீழ் பள்ளிக்கூடங்களில் நடந்தப்படாமல் தெருவில் வாழ்க்கையில் ஒரு அம்சமாக இருந்தது. மற்று, தாளத்தோடொத்த (**Rythm**) நடனங்களும், கும்மிக் கோலாட்டங்களும் சிறுமிகள் அப்பியசித்து வந்தார்கள். வயதுவந்தவர்களுக்கு பஸ்கி, தண்டால், கர்லா முதலிய அப்பியாசங்கள் கொடுக்கப்பட்டன. நித்திய கர்மாக்களில் அப்பியசிக்கவேண்டிய முறைகளாகச் சூரிய நமஸ்காரம், பிராணாயாமம்,

யோகாசனங்கள் முதலிய அம்சங்களை உடற்பயிற்சிக்காக மேற்கொண்டிருந்தார்கள்.

ஆங்கில அரசாட்சியின் பயனாக அவர்கள் தேசத்து வழக்கமான பயிற்சியையும், மேல்நாட்டு விளையாட்டுகளும் நமது நாட்டில் புகுத்தப்பட்டன. பிறநாடுகளில் உடற்கல்வி எப்படி அளித்தார்கள் என்று கவனிப்போம்.

(1) **Swedish System** :—ஸ்வீடன் தேசத்தார்களின் முக்கிய நோக்கம் திருத்தம் கொடுக்கும் அப்பியாசங்களினால் (**Corrective Exercises**) திருத்துதல் நேர்நிலை அப்பியாசங்களால் (**Correct Posture Training exercises**) நேர்நிலை கொடுத்தல் என்பனவாகும். இத் தேசத்தார்கள் (**Command**) உத்திரவின் கீழ்ப்படிந்து ஒருங்கு சேர்ந்துப் பயிலுதலில் (**Mass Drill**) உற்சாகத்தையும், ஒழுங்கையும் காட்டுகிறார்கள்.

(2) **Roman System** :—இத்தேசத்தின் உடற்பயிற்சியானது பிற்கால வாழ்க்கையில் சைன்னியத்தில் சேர்ந்து தேசப்பாதுகாப்பு, தேச ஆக்கிரமிப்பு முதலியவைகளைக் கவனிப்பதற்கு ஏற்றவாறு அடிப்படையான முறையில் அமைந்திருந்தது.

(3) **German System** :—ஜெர்மானியர்கள் இயற்கையின் சட்டங்களையும், உடற் கூறுகளையும் அறிந்து, சமதர வளர்ச்சி (**uniform development**) யடையும்படியான திட்டங்கள் வகுத்தார்கள். **Bars, Rings** (வளையங்கள்), **Dumbels** முதலியவைகளில் அப்பியாசங்களை ஏற்படுத்தினார்கள். இவர்கள் பலவித விளையாட்டுகளுக்கும் (**Games**) இடம் கொடுத்திருந்தார்கள். ஸ்திரீகளுக்கென்று பிரத்தியேகமான அப்பியாசங்கள் உண்டு. ஆனால் இவர்கள் மற்றதேசங்கள் மாதிரி அல்லாது பயிற்ச்சிபெற்ற ஆசிரியர்களிடம் இவ்வேலையை ஒப்படைத்தார்கள்.

(4) **Greek System** :—இவர்கள் நோக்கம் மிகவும் புனிதமானது. இவர்கள் உடற்பயிற்சியின் மூலமாக வலிமையும், அழகையும் பெற்றார்கள். இவர்கள் நாட்டில் பயிற்சியளிக்கும் கூடங்கள் பல இருந்தன. அவைகளில் பயிற்சி பெறுவதற்கு வேண்டிய உபகரணங்கள் இருந்தன. அடுத்தாற்போல் நீந்துவதற்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. சாதாரணமாக நல்ல உடைகளை அணிந்தவுடன் ஒரு புகைப்படம் பிடித்துக்கொள்வதற்கு ஆசைப்படுவதுபோல் அவர்கள் சிற்பியிடம் தம் தேகத்தைக் காண்பித்து அதைப்போல் சிலை செய்ய ஆசைப்பட்டார்கள்.

இயற்கையாகவுள்ள ஓட்டம், தாண்டுதல், எறிதல் முதலியவைகளில் பந்தயங்கள் வைத்து அதில் ஜெயித்தவருக்கு ஆலிவ் இலைகளால் செய்யப்பட்ட ஒரு கிரீடத்தைப் பரிசாக அளித்து வந்தார்கள். அப்

படிக் கிரீடங்கள் அணிந்து வந்தவர்கள் மகாவீரர்களாக மதிக்கப்பட்டார்கள். இதற்கு (Olympics) ஒலிம்பிக்ஸ் என்று பெயர். இது ஏசு பிறப்பதற்கு 1300 வருஷங்களுக்கு முன்னிருந்தே நடந்துவந்தது. காலக்கிரமத்தில் (Professionalism) பணத்துக்காக ஓடுபவர்கள் அதிகமாக ஏற்பட்டதால், ஏசு பிறந்து 394 ஆம் ஆண்டில் இம்முறை நின்றுவிட்டது. மறுபடி 1896 இல் (Athens) இல் இந்த ஒலிம்பிக்ஸ் புனருத்தாரணம் செய்யப்பட்டது.

(5) **American System** :—அமெரிக்காவில் பல தேசத்தவர்கள் குடியேறியதால் அந்தந்தத் தேசத்திலுள்ளமுறைகளை அவரவர்கள் அநுசரித்து வந்தார்கள். காலக்கிரமத்தில் அவர்கள் அவைகளிலுள்ள சாரமான விஷயங்களைச் சேர்த்து ஒரு புதிய திட்டம் வகுத்தார்கள். இந்தத் திட்டத்தில் விளையாட்டுகளுக்குப் பிரதான இடம் கொடுக்கப்பட்டது. இந்தத் திட்டம் இந்தியாவுக்கு 1930 ல் **Grey** என்பவரால் கல்கத்தாவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இப்பொழுது இந்தியாவில் அநுசரிப்பது மூன்றையும் அடிப்படையாகக் கொண்ட திட்டம். ஆனால் சைன்னியங்களி லிருந்து வந்தவர்களைக் கொண்டு பயிற்சியும், மற்ற ஒருவரைக் கொண்டு (Sports Superintendent) விளையாட்டும் நடத்தாமல், இதற்குத் தனியாகப் பயிற்சி பெற்ற ஆசிரியரால் நடத்தப் பெறுகிறது. பள்ளிக்கூடம் வாழ்க்கைக்குப்போதுமான பயிற்சிக்கூடமானதால், இப்பொழுது இந்த உடற்கல்வியைப் பொதுக் கல்வியின் ஒரு அம்சமாகச் சேர்த்திருக்கிறார்கள். அப்பயனை இந்திய மக்கள் பெற்று திடகாத்திரராய் வாழஎல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சந்தாதார்களுக்கு ஓர் வேண்டுகோள்

"பாலர் கல்வி"யின் சந்தா தொகையை முன் பணமாகவே அனுப்பிவிட வேண்டுமென்பது சந்தாதார்கள் அறிவார்களல்லவா? ஆகையால், தமது சந்தா காலம் முடிவடைந்தவுடனே, சந்தாதார்கள் தயவுசெய்து சந்தாவை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். அவ்வாறு அனுப்பி வைக்கச் சௌகரியப்படாவிட்டால், தயவுசெய்து எங்களுக்கு எழுதித் தெரிவிக்கவும். —பத்திராதிபர்

*பிறவிச் சக்திகளும், உணர்ச்சிப் பெருக்குகளும்.

Instincts and Emotions—Factors in "Human Motivation."

ஸ்ரீ M. S. ஸ்ரீநிவாஸ சர்மா, M.A.

IV

இருண்ட இரவில் தனியே வெளிக்கிளம்ப ஏன் பயப்படுகிறோம்? மறை பொருள்களும் நூதன வஸ்துக்களும் ஏன் திகைப்பையும் அறியும் ஆவலையும் தூண்டுகின்றன? ஆஸ்தி சேர்ப்பதிலும், அதனை விருத்தி செய்வதிலும் ஏன் அவ்வளவு ஆத்திரம்? புதிய உண்மைகளையும் நவீன யந்திரங்களையும் கண்டு பிடிப்பதில் நமக்கு ஏன் அவ்வளவு உத்சாகம்? வாலிப வயதில், அழகிய ஸ்திரீகளைக் கண்டதும் ஏன் மனம் குதூகலமடைந்து காதல் அநுபவம் உதிக்கிறது? நம் விஷயத்தில் யாராவது தலையிட்டாலும் சரி, நம்மை அவமதித்தாலும் சரி, ஏன் நமக்குக் கோபம் வருகிறது? சீட்டு, பந்து, கிரிக்கெட் முதலிய விளையாட்டுகளில் ஏன் அவ்வளவு சிரத்தை? விகடப்பத்திரிகைகளும் ஹாஸ்ய நாடகங்களும் ஏன் அவ்வளவு ஸ்வாரஸ்யமாயிருக்கின்றன? சர்க்கஸ்காரர்களின் சாஹஸங்களுக்கும், யுத்த வீரர்களின் பராக்கிரமங்களுக்கும், தாயின் தியாகத்திற்கும், தந்தையின் தன் மறுப்பிற்கும் என்ன காரணம்? வீடு வாசல்களையும், பெண்டு பிள்ளைகளையும் துறந்து, மனித வாஸனையே இல்லாத மலைக்குகைகளிலும், பயங்கரமான காடுகளிலும் ஆத்மவீரர்கள் நடத்தும் கடுந்தவத்திற்குத் தூண்டுதல் யாது?

இத்தனைக் கேள்விகளுக்கும் மானஸநூல் ஒரே வார்த்தையில் பதில் அளிக்கிறது? "இன்ஸ்டிங்ட்" (Instinct) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் "பிறவிச்சக்தி" தான் நம் செயல்கள் யாவற்றிற்கும் தூண்டுகோல். நமக்குப் "பகுத்தறிவு" என்னும் விசேஷ ஞானமிருக்கிறதென்றும், அதனால் நாம் உந்நத பதவியை வஹிக்கிறோமென்றும், நம் காரியங்கள் யாவும் தீர்க்காலோசனையின் பேரில் செய்யப்படுகின்றனவென்றும் நாம் நம்பியிருக்கிறோமல்லவா? ஆனால் உண்மை யென்னவென்றால், நம் சிந்தனைகளும், இயக்கங்களும், உணர்ச்சிகளும், நோக்கங்களும் நம் பிறவிக்குணங்களாகிற இயற்கைச் சக்திகளின் வெளித்தோற்றங்கள் என்பதேயாம். இந்தச் சக்திகள் நம்முடன் பிறவாவிட்டால், நாம் சீவனற்று, பலமற்று, உணர்ச்சியற்று, செயலற்று, சலனமற்று, பயனற்று, அறிவற்று, ஜடமாகவிழுந்து கிடப்போம். இவைகளிலிருந்து தான் சமூக லக்ஷியங்களும், மானிடக்கிரியைகளும் உதித்து, நாகரிக

* திருச்சி அகில இந்திய ரேடியோ அநுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

முதிர்ச்சிக்கும், ஞானவளர்ச்சிக்கும் சாதனங்களாயிருக்கின்றன. உயிர் மனம், இச்சை இவைகளின் அறிவுக்கெட்டாத ரகஸ்யத்தின் திறவுகோல் இந்த இயற்கைச் சக்திகளுள் மறைந்து கிடக்கிறது.

வாழ்க்கைப்போர்.—உடன்பிறந்த இந்த அந்தரங்கச் சக்திகள் எப்படி நமக்குப் பிறப்புரிமைகளாயின? ஆதி முதற்கொண்டு மனித வர்க்கத்தின் பரிணாமப்போரில் உயிர் நிலைப்பதற்கு 'உபகரணங்களாயிருந்த அநுபவங்கள் தான் இந்தச் சக்திகள். இவை, இயற்கையில் நடைபெறும் பிராணாதாரப் போரில் வெற்றிக்கு வித்தாக இருப்பதால், பரம்பரை நியதிப்படி, நமக்குக்காணியாக்ஷியாகக் கிடைத்தவையாம். ஆகவே பிறந்தவுடன் குழந்தை வகையற்று, திக்கின்றியிருப்பதாக நினைக்கக் கூடாது. மனிதனால் அநுபவஞானத்தின் சாரம் முழுவதும் தன்தேக அமைப்பில் லயிக்கப் பெற்றுப் பிறந்த குழந்தை, உடனே எவர் உதவியுமின்றி மூச்சுவிடவும். அழவும், பாலுண்ணவும், மல ஜலம் கழிக்கவும் ஆரம்பிக்கின்றது. பிறகு, படிப்படியாக மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய இந்திரியங்களின் தொழில்களும், பிறவிச்சக்திகளின் செயல்களும் உதிக்கின்றன.இவைகள் யாவும் பிறர் சொல்லிக் கொடுக்காமலே, தேகம் பக்குவதசையடைந்ததும், தாமே வெளிக்கிளம்புகின்றன.

சக்திகள்.—பசி, தாகம், தற்காப்பு, பயம், கோபம், ஆச்சரியம், காமம், பெற்றமனம், அவா, உண்டாக்கல், ஸம்பாத்யம், விளையாட்டு, சமூகக்கூட்டுறவு, நகைப்பு, இறுமாப்பு, அடக்கம் இவைகள் நம் பிறவிச்சக்திகளுள் முக்கியமானவை. இந்தச் சக்திகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு "உணர்ச்சிப்பெருக்கு" (Emotion) கலந்து ஐக்கியப்பட்டிருக்கிறது. உணர்ச்சியுடன் கலந்த சக்திகள் மனித வாழ்க்கையைத் தீர்மானித்து, ஸகல காரியங்களையும் தூண்டுகின்றன. தேச பக்தியின் ஆவேசமும், காதலின் வல்லமையும், விஞ்ஞானிகளின் விடாமுயற்சியும், உணர்ச்சிகளின் பழுத்தகனிகளாம். இந்தச் சக்திகளைத் தக்க முறையில் அப்பியசித்து, கல்வியின் உதவியால் நற்குண நல்லொழுக்கங்களைப் பயின்று, சமூகத்தில் ஐக்கியப்பட்டு, ஒத்து வாழ்வதில் தான் மன ஆனந்தமும் ஆத்மசந்துஷ்டியும் அடங்கியிருக்கின்றன. இவைகளுள் ஏதாவதொன்று அமிதமாகத் தலையெடுத்து விட்டாலும் சரி, ஒடுங்கி உள்ளடக்கப்பட்டாலும் சரி, வாழ்க்கை, நிலை குலைந்து, விபரீதங்களும் கோரங்களும் உண்டாகித் தலை கீழாகக் கவிழ்ந்துவிடும்.

தற்காப்பு நம் வாழ்வின் பிரதான சக்தி. இதனுடன் ஐக்கியப்பட்டுள்ள உணர்ச்சி பயம். இதன் தூண்டுதலினால் நாம், அபாயங்களை விட்டகன்றும், கத்தி, துப்பாக்கி முதலியவைகளைப் பிரயோகித்தும், தேகபலத்தைப் பெருக்கியும், நம் உயிரைக் காப்பாற்றிக் கொள்கிறோம். பய உணர்ச்சியின்றேல் நாம் எப்பொழுதும் ஆபத்திலேயே இருப்போம். ஆதிகாலந்தொட்டு நரகபயத்தினாலன்றோ மக்கள் துஷ்ட வழிகளிற் செல்லாமலும், பிறர்க்குத் தீங்கிழைக்காமலுமிருக்கப் பழக்கப்

பட்டு வருகிறார்கள்? கல்வியபிவிருத்திக்கும், நன்னடக்கைப்பயிற்சிக்கும் பயம் சிறிது அவசியந்தான்; ஆனால் மிதமிஞ்சிய பீதி, காரணமற்ற திகிலையும், பயரோகங்களையும் உண்டாக்கி விடுகிறது.

ஆச்சரிய உணர்ச்சியே ஞானவளர்ச்சிக்கும், சாஸ்திர அறிவுக்கும் காரணம். பௌதிக, ரஸாயன நிபுணர்கள் இயற்கையற்புதங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டு, அவைகளையறிய ஆவல்கொண்டு, ஆராய்ச்சி செய்ய ஆரம்பிக்கிறார்கள் குழந்தைகள் கல்வியில் தேர்ச்சியடைவதற்கு, ஆச்சரியமும், அறிய ஆவலும், அக்கரையும் அவசியம். அப்பொழுது தான் கண்ணுங்கருத்துமாய்க் கவனம் செலுத்திப்படிப்பில் விருத்தியடைய இயலும். இந்தச்சக்தி இயற்கையில் அமையாத சிறுவர்கள், தம் பாடங்களில் கவனம் செலுத்தாமல் மந்தர்களாகி விடுகிறார்கள்.

ஸமாஜம், ஸமூஹ உணர்ச்சி ஆனந்த வாழ்வின், ரஹஸ்யம். மனிதன் ஸமூஹத்தில் பிறந்து, அதன் அறிவையும், பாஷையையும், கலைகளையும், ஸ்வீகரித்துப்பிறகு, அதற்கென்றே வாழ்கிறான். மெய்ம்மை, மரியாதை, பரோபகாரம், பிரேமை பொறுமை முதலிய நற்குணங்கள் சமூகக்கூட்டுறவில் தான் விருத்தியாகும். ஜனஸங்கத்தில் வசித்து, உறவாடி பிறரால் ஸன்மானிக்கப்பட்டு, அவர்களுடைய அன்பையும், ஆதரவையும் பெறுவதில் தான் நமது ஜன்மம் ஸாபல்யமடைகிறது. பத்திரிகைகளில் தங்கள் பெயர் வருவதற்காக எத்தனை பேர் எவ்வளவு சிரமப் படுகிறார்கள்? தண்டனைகளுக்குள் மிக்கக் கடுமையானது **ஏகாந்த காராக்ரஹ வாசம்.** ஜாதிமத பேதங்கள் மிகுந்துள்ள ஜனங்கள், தங்கள் குழந்தைகளைக் கலாசாலைகளில் ஒற்றுமையுடனும், ஸ்நேகத்துடனும் கூடி வளர்ந்து வரத்திட்டம் செய்யவேண்டும்.

காம உணர்ச்சி வம்ச விருத்திக்கு மூலகாரணம். யௌவன வயதில் இது கட்டுக்கடங்காத சக்தியுடையது. சிருங்கார ரஸக் கவிகளும், கீதங்களும், கதைகளும் இந்த உணர்ச்சியின் சிருஷ்டிகள். வீரம், அழகு, பௌருஷம், கம்பீரம், இன்பம், சக்தி, தைரியம், தேஜஸ் இவைகள் உண்மைக்காதலின் குழந்தைகள். இதன் எல்லையற்ற சக்தியை யடக்கித் தேக்கி, கலையபிவிருத்திக்கும், ஞான வளர்ச்சிக்கும், நாகரிக முதிர்ச்சிக்கும் ஆஸ்பதமாக்குகிறோம். சமூகவாழ்வு இனிது நடைபெறும் பொருட்டு "விவாஹம்" என்னும் ஆசாரம் ஏற்படுத்தி, அதைத் தெய்வ சம்மதமாக்கி, பதிவிரதா தர்மத்தையும், ஏகபத்னி விரதத்தையும் பரிசுத்த வாழ்விற்கு வித்தாகச் செய்திருக்கிறோம்.

பரோபகாரம், மாத்ருபாவ உணர்ச்சி சிசு சம்ரக்ஷணைக்கும், குடும்ப ஸ்தாபனத்திற்கும் அஸ்திவாரமாகவுள்ளது. குழந்தை பிறந்ததும், ஸ்திரீ தன்னலத்தை அறவே ஒழித்து, தேக சுகத்தையும் ராத்தூக்கத்தையும் முற்றிலும் மறந்து, அந்தக் குழந்தைக்குச் செய்யும் தொண்டிற்கும், உழைப்பிற்கும் வரம்புண்டா? தம் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காகப் பிதாக்கள் புரியும் தியாகத்திற்கும் சுயநல மறுப்

பிற்கும் இணையுண்டா? இந்தச் சக்திதான் பரோபகார குணத்திற்கும், தான தர்மங்களுக்கும், பொதுஜன சேவைக்கும் உற்பத்தி ஸ்தானம்.

வித விதா உணவுகள்; புது புது பானங்கள்—இவைகளைக் கணக்கிட முடியுமா? இந்த விநோதை சிருஷ்டிக்கெல்லாம் பசிதாகமே காரணம். மனித உழைப்பையும், சுறுசுறுப்பையும், விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய சகல உத்யோகங்களையும் தாங்கி ஆதரிப்பது, இந்தப்பசிதாக உணர்ச்சிதான்.

விளையாட்டு :—ஆண், பெண், சிசு, கிழம் யாவரும் ஆநந்தத்துடன் அநுபவிப்பது விளையாட்டும், நகைப்பும். விளையாட்டு ஒருவருக்குக் கீழ்ப் பட்டு, ஒரு பயனை உத்தேசித்துப் பலவந்தமாய் நடத்தும் தொழி லன்று. அதனால்தான் அது இன்பத்தை யளிக்கிறது. பால்யத்தில் ஓடியாடி மகிழ்கிறோம். வயோதிகத்தில் வீட்டுக்குள்ளேயே விளையாடு கிறோம். நம் மனப்படி இன்பத்துடன் செய்யும் எந்தத் தொழிலையும் விளையாட்டென்னலாம். குழந்தைகளின் மன வளர்ச்சியும் உடல் வளர்ச்சியும் விளையாட்டு முறையில்தான் செம்மையாகச் சித்திபெறும். பலவந்தத்துடனும் பயத்துடனும் செய்யும் காரியங்கள் வெறுப்பையும் விரோதத்தையும் உண்டாக்கி விடுகின்றன.

சிரிப்பு :—நகைத்தல் பல காரியங்களைச் சாதிக்கிறது. முதலில், அது தேகாரோக்கியத்திற்கு உத்தமக் கருவி. ஒரு ஐந்து நிமிஷம் வாய்விட்டு. வயிறுர சிரித்துப் பார்! உன் தலைவலியும், வயிற்றுநோயும், மனக் கவலைகளும், துக்கங்களும் எங்கே ஓடி ஒளிந்தன? "சிரித்துக் கொழுத்திரு"—என்று ஒரு ஆங்கிலப் பழமொழியுமுண்டு. சிரிப்பே சந்தோஷ அநுபவத்திற்குக் காரணம். மனிதனுக்குத் தன் குழந்தையின் சிரித்தமுகம், தன் மனைவியின் புன்முறுவல் இவைகளைவிட வேறு ஆனந்தம் உண்டா? நகைச் சுவையுள்ள வியாசங்களும், உபந்யாசங் களும் ஆசார சீர்திருத்தங்களை எளிதில் செய்து முடிக்கின்றன. மனிதர் களின் சீர்கேடான, விபரீத நடையுடை பாவனைகளை ஹாஸ்யம் செய்து, பரிகஸித்துத் திருத்திவிடலாம். மேலும், இந்த உலகவாழ்க்கை அவ்வளவு பிரமாதமல்ல என்பதை இந்த உணர்ச்சி வற்புறுத்துகிறது. நமக்கு நேரிடும் துன்பங்களைக் கண்டு மனமுடைந்து நலிந்து போகாமல் அவைகளை அசட்டை செய்து நகைக்கக் கற்றுக்கொண்டால், நமக்கு சஹிக்கும் சக்தியும், ஆத்ம பலமும் விருத்தியாகும்.

சண்டை :—நம் ஸ்வதந்திரத்தை நாட்டுவதற்கும், நம்மை எதிர்ப் பவர்களைத் தாக்கி, நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கும், நம் ஆதிக் கத்தை ஸ்தாபித்துத் தலைமை வகிப்பதற்கும் அடிப்படையாகவுள்ளது போரிடும் சக்தியும் கோப உணர்ச்சியுமேயாம். இதுவே தற்பெருமை, கர்வம், அகம்பாவம் முதலிய குணங்களைத் தூண்டி, வீரச் செயல் களுக்கும், கலகப் புரட்சிகளுக்கும் மூலகாரணமாயிருக்கிறது. உலகம்

புத்துயிர் பெறவும், புதுயுகம் பூத்துப் பொலியவும் இச் சக்தித்தேவை. துஷ்டநிக்ரஹத்திற்கும், எவ்வித காரியசித்திக்கும் இந்தச் சக்தி மெத்தவும் அவசியம். ஆனால் இது வரம்பு கடந்து வளர்ந்துவிட்டால், வீண் இறுமாப்புண்டாகி, ராக்ஷஸகுணம் மேலிட்டு, பைத்தியம் முதலிய மனக் கோளாறுகள் ஏற்பட்டுவிடும். சமூக வாழ்க்கை இனிதாக நடைபெறவேண்டுமானால், சிலர் தலைவர்களாகவும், பிறர் வணங்கிக் கீழ்ப் படிபவர்களாயுமிருத்தல் வேண்டும். தலைவர்களாயிருக்க விரும்பினால் தைரியம் உடனுறுதி, திடச்சித்தம, தன்மறுப்பு, பரோபகாரம், பாரபக்ஷமின்மை, தர்மநியாயம், முதலிய உத்தம குணங்களில் நல்ல பயிற்சி பெற்றிருக்கவேண்டும்.

நம்முடன் பிறக்கும் இந்தச் சக்திகளும் உணர்ச்சிகளும் ஒன்றுக்கொன்று விரோதப் படாமல், உத்தம முறையில் வளர்ந்து ஒன்றுபட்டுத் தம் தொழிலைப் புரிந்து, நம் வாழ்க்கைக்கு இன்பம் தருவதற்காகவே, நமக்கு சுமார் இருபது வயதுவரை இளமைப் பருவமும், கவலையற்றுக் கல்விபயிலப் பெற்றோர் உதவியும், நிம்மதியான அவகாசமும் அமைந்துள்ளன. இந்த இளமையை வீணில் கழித்தாலும் சரி, இந்தச் சக்திகளை மனோதத்துவ நீதிப்படி பிரயோகிக்கா விட்டாலும் சரி, மானிட ஜீவியம் அலங்கோலப்பட்டு, அவலமாகிவிடும்.

காபிக்கு எடுத்தது ★ ★



கணேஷ் காபி

பச்சையாகவும்
வறுத்ததாகவும்
பொடியாகவும்
முதல்தரமான காபி கிடைக்கும்

கணேஷ் & கம்பெனி

தம்புச் செட்டித் தெரு :: :: மதராஸ்

சில்லரை வியாபாரம்

285, சைனா பஜார் :: :: மதராஸ்

சிறு குழந்தைகட்கு கணிதம் போதிக்கும் முறை

281 ம் பக்கத்தின் தொடர்ச்சி

By P. Subrahmanya Ayyar (Thyagaraya Nagar)

பயிற்சி 6

ராமுவும் கிட்டுவும் எதிர் எதிரே உட்கார்ந்திருக்கிறார்கள். (7வது படம் பார்) படத்தில் இடதுபக்கம் காணப்படுவது ராமுவின் இடது கை. வலது பக்கம் இருப்பது கிட்டுவின் வலதுகை. ராமு மூன்று விரல்களை மடக்கிக்கொண்டு இரண்டு விரல்களை நீட்டி வைத்துக்கொண்டிருக்கிறான். கிட்டு இரண்டு விரல்களை மடக்கி மூன்று விரல்களைநீட்டி வைத்துக் கொண்டிருக்கிறான். இருவரும் விரல் நுனிகளைச் சேரவைத்திருக்கிறார்கள். "இந்த விரலுக்கும் அந்த விரலுக்கும் சரியாகப்



Fig 7

Fig/8

போயிற்று. அதற்கும் இதற்கும் சரியாக இருக்கிறது; இந்த விரல் தனியாக இருக்கிதே; இதற்கு ஜோடி இல்லையே" என்று கிட்டு சொல்லுகிறான். "இந்தத் தடவை போனால் பொகட்டும் வா, மறுபடி விளையாடலாம். இப்போது 'ஒன், டூ, திரீ' நான் சொல்லுவேன். திரீ சொன்னதும் உனக்கு இஷ்டமான விரல்களை நீ நீட்டவேண்டும் எனக்கு இஷ்டமானவைகளை நான் நீட்டுவேன். யாருடையது அதிகம் யாருடையது குறைவு என்று பார்ப்போம்" என்று ராமு சொல்லுகிறான். அப்

படியே இருவரும் விளையாடுகிறார்கள். சில சமயங்களில் இருவரும் சம எண்ணிக்கையுடைய விரல்களை நீட்டுவதும் உண்டு.

மற்றொரு விளையாட்டு : 8 வது படத்தில் காணப்படுவது ராமுவின் இடது கை. 4 விரல்களை நீட்டிக்கொண்டிருக்கிறான். "என் விரல்களுக்கு மோதிரம் போடு" என்று கேட்கிறான். கிட்டுவினிடத்தில் நிரம்ப மோதிரங்கள் போன்ற இரும்பு வளையங்கள் இருக்கின்றன. அவைகளை ஒன்றொன்றாக எடுத்து ஒவ்வொரு விரலுக்கும் போட்டு முடிக்கிறான். பிறகு மற்றொரு பையன் கிட்டுவினிடம் வந்து தனக்கு இஷ்டமான விரல்களுக்கு மோதிரங்கள் போட்டுக்கொண்டு போவான். இப்படியே பலர் வந்து விளையாடுவார்கள். [மோதிரங்கள் எல்லாவற்றையும் தனித்தனியே தன் பக்கத்தில் சேர்த்து வைத்துக்கொள்ளாது இருப்பது மற்றொருவகை. கொஞ்ச தொலைவில் ஒரு மரச்சட்டம் படுத்தாற்போல் சுவரில் பதியவைத்திருக்கும். அதில் 10 கொக்கிகள் காணப்படும். முதலாவது கொக்கியில் ஒரு மோதிரமும் 2 வது கொக்கியில் 2 மோதிரங்களும் 3 வது கொக்கியில் 3 மோதிரங்களும், இது மாதிரியே மற்றவைகளிலும் தொங்கவிட்டு இருக்கும். 10 வது கொக்கியில் 10 மோதிரங்கள் காணப்படும். இந்த மோதிரங்கள் தனித்தனியே தொங்கவிடப்பட்டிரா. 9 வது கொக்கியிலிருந்து வளையங்களை எடுத்தால் 9 மோதிரங்களும் ஒரு நூலினால் கட்டப்பட்டு காணப்படும். மற்ற கொக்கிகளிலுள்ள மோதிரங்களும் இப்படி நூலினால் கட்டப்பட்டே இருக்கும். ராமுவின் 4 விரல்களுக்கு மோதிரங்கள் வேண்டுமானால் கிட்டு முதலில் விரல்களின் எண்ணிக்கையைக் கூர்ந்து கவனிப்பான். இத்தனை வேண்டுமென்று தன் மனதில் ஓர் எண்ணம் கொள்வான். பிறகு கொஞ்ச தொலைவிலுள்ள மரச்சட்டத்தண்டை போவான். அங்கு நின்று எதை எடுப்பதென்று யோசனை செய்வான். தடமாடுவான். கடைசியாக எதையோ எடுத்துவருவான். 5-வது கொக்கியில் தொங்கும் மோதிரங்களைக் கொண்டுவருகிறான் என்று வைத்துக்கொள்வோம். நூலை அறுத்து மோதிரங்களை விரல்களில் போடுவான். கடைசியில் ஒரு மோதிரம் மிகுதியாக இருப்பதை அறிவான். இந்த மோதிரத்திற்கு நீட்டின விரல் இல்லையே என்று திகைப்பான். தான் கொண்டுவந்தது தவறு என்று அறிவான். இப்படி பலதடவைகளில் தவறு செய்து, தான் செய்த பிசகை கவனித்து, யோசித்து யோசித்து சரியாகசெய்யும் பழக்கத்தைக் கிட்டு அடைவான்.

[4-வது பயிற்சியின் விவரணத்தில் வாஷர்களை ஒன்றாகச்சேர்த்து வைப்பது ஒருவகை என்றும் ஆணிகளையும் நட்டுகளையுங்கொண்டு வாஷர்களைத் தனி இணைப்பில் வைப்பது மற்றொருவகை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கிட்டு மோதிரங்களைத் தன் அருகிலேயே சேர்த்து வைத்துக்கொள்வதாகிய முதல் வகையும் அவைகளைத் தனி தனி தொகுதியாக நூலினால் கட்டி கொக்கிகளில் தொங்கவிட்டு வைப்பதாகிய

இரண்டாவது வகையும் 4-வது பயிற்சியின் விவரணத்தில் சொல்லப் பட்ட இரண்டு வகைகளும் அத்தியந்த சாமீப்பியம் உள்ளவை.]

பயிற்சி 7

தான் பார்க்கும் வஸ்துத் தொகுதியின் எண் மதிப்பை மனத்தில் கிரகித்துக்கொண்டு அதற்குக் குறைவுபடாமலும் அதிகப்படாமலும் வேறு பொருள்களை எடுத்துவர குழந்தைகள் பழக்கம்பெற்ற பிறகு குறித்த நிபந்தனைகளை நிறைவேற்ற குழந்தைகளுக்குப் பழக்கம் தர வேண்டும். உதாரணமாக ராமுவும் கிட்டுவும் எதிர் எதிரே உட்கார்ந் திருக்கிறார்கள். நடுவே "ஜெம்பிஸ்கோத்துகள்" நிரம்பக் கொட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. "கிட்டு! நான் எத்தனை எடுத்துக்கொள்ளு கிறேனோ அதற்கு மேலே ஒன்று அதிகமாக நீ எடுத்துக்கொள்" என்று ராமு சொல்லி தான் 4 எடுத்துக்கொள்ளுகிறான். கிட்டு தானும் 4 எடுத் துக்கொண்டு அதன் பிறகு ஒன்று எடுத்துக்கொள்ளுகிறான். தன்னை விட ஒன்று அதிகமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ராமு சொன் னதுதான் மேலே பிரஸ்தாபித்த நிபந்தனையாகும். மற்றொரு சமயம் "இரண்டு குறைவாக எடுத்துக்கொள்ள வேண்டும்" என்ற நிமந்தனை யையும் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

இந்த விளையாட்டிலே கூட்டல் கணக்கின் ஞானம் வித்துபோல் அடங்கிக்கிடப்பது கவனிக்கத்தக்கது.

புஷ்பங்களும் அவற்றின் வேலைகளும்

By K. S. Chandrasekharan, M.A.,L.T.

வகுப்பில் மலர்ந்த புஷ்பங்களையுடைய செடியொன்றும், மாணவர்கள் நன்கு பார்த்து பழகியிருக்கக்கூடிய புஷ்பங்களும் இருக்கவேண்டும். புஷ்பங்களைக் கொண்டுவர முடியாவிட்டால் அவைகளின் அமைப்பை விளக்கக்கூடிய நன்கு வரையப்பட்ட படமாவது இருக்க வேண்டும்.

புஷ்பங்களின் பாகங்களைப்பற்றி பிள்ளைகள் ஏற்கெனவே அறிந்திருப்பார்கள். இதை மறுபடி நினைப்பூட்டி அவர்களை சொல்லச் செய்யவும். கூடுமானால் மாணவர்களில் ஒருவனே ஓர் புஷ்பத்தை வகுப்பில் பிரித்தெடுத்து மற்றவர்களுக்கு அதன் பாகங்களைக் காண்பிப்பது நல்ல முறையாகும். அவசியமானபொழுது ஆசிரியர் அவனுக்கு உதவி செய்யலாம்.

புஷ்பங்களின் கீழ்க்கண்ட பாகங்களை கரும்பலகையில் எழுதி வைத்திருக்கவும்.

1. காம்பு
2. புறவிதழ்
3. அகவிதழ்
4. கேசரத்தாள்கள்—மகரந்தப்பை
5. அண்டகோசம் — அண்டாசயம் கீலம், கீலாக்ரம்.

புஷ்பத்தின் மொக்கு

வஸந்த காலத்தில் இலைகள் முதன்முதல் தோன்றுவதை மாணவர்கள் கவனித்திருக்கக்கூடும். இதை நினைப்பூட்டவும். இவற்றை என்னென்று அழைக்கிறோம்? அவை எப்படி தோன்றுகின்றன? அவைகளுக்கு என்ன நேரிடுகின்றன? செடியில் இருக்கும் சில புஷ்ப மொக்குகளை காண்பிக்கவும். இவைகளும் குறுத்துக்களே யாகும். ஆனால் அவை காலக்கிரமத்தில் மலரும்பொழுது அவற்றிலிருந்து இலைகள் தோன்ற. இலைகளுக்குப் பதில் புஷ்பங்கள் தோன்றும். ஆகவே இக் குறுத்துக்களைப் புஷ்பக் குறுத்துக்கள் என்று சொல்லலாம். புஷ்பக் குறுத்துக்களையே நாம் "மொக்கு" என்று சொல்லுகிறோம்.

புஷ்பமொக்கொன்றை செடியிலிருந்து பறித்து மாணவர்கள் அதை சோதனை செய்யுமாறு செய்யவும். வேறொன்றை ஜாக்கிரதையாக பிரித்து நடுவில் ஓர் இளம் புஷ்பம் இருக்கிறதென்பதைக் காண்பிக்கவும். மொக்கின் வெளிப்பாகத்தில் பசுமை நிறமுள்ள ஓர் போர்வை இருக்கிறது. இதுவே பிறகு புறவிதழாக மாறுகிறது. இப் போர்வை இருப்

பதின் காரணம் என்ன? உள்ளிருக்கும் மற்றைய பாகங்கள் மிகவும் நுட்பமாயும் வெளி சீதோஷ்ண மாறுபாடுகளினால் நைந்துபோகக்கூடிய தன்மை யுடையனவாகவும் இருக்கின்றன. அவற்றைப் பனி, மழை, வெயில் முதலியவைகளிலிருந்து காப்பாற்றுவதற்கெனவே இப்போர்வை ஏற்பட்டிருக்கிறது.

இப்போர்வையை நீக்கி இதற்கு அடுத்தாற்போல் மிருதுவான அழகு நிறைந்த அகவிதழ் இருப்பதை கவனிக்கச் செய்யவும். அகவிதழ் வழவழப்பாகவும் வெல்வெட்டுப்போன்ற மென்மையையும் உடையன. இவை கேசரத் தாள்களையும் அண்டகோசங்களையும் சூழ்ந்திருக்கின்றன. கேசரத்தாள்கள் முதிர்ந்து வெளிசீதோஷ்ண நிலைமைகளைத் தாங்கக் கூடிய சக்தி வரும்வரையில் அகவிதழ் இவற்றை மூடிக்கொண்டிருக்கும். அந்நிலைமை வந்ததும் அகவிதழ்களின் இதழ்கள் தாமே மலரும்.

கேசரத்தாள், மகரந்தப்பை, அண்டகோசம்.

2. அண்டாசயத்திலுள்ள இளம்விதைகள் தாமாகவே முதிர்ந்து வித்துக்களாக மாறமுடியாதென்னும் விஷயத்தை வற்புறுத்தவேண்டும்.



இவ்விளம் விதைகள் (அண்டங்கள்) முற்றி வித்தாவதற்கு வேறொரு பொருள் அவசியம்.

நன்றாக மலர்ந்திருக்கும் புஷ்பத்திலுள்ள மகரந்தப்பைகளை காண்பிக்கவும். மகரந்தப் பைகளை சிறிது குலுக்கி அவைகளிலிருந்து வெளி

வரும் மஞ்சள் பொடியை காண்பிக்கவும். மாணவர்கள் ஏற்கெனவே இதன் பெயர் மகரந்தப்பொடி என்று அறிந்திருப்பார்கள். இப்பெயரை நினைப்பூட்டவும். மகரந்தப்பொடிக்கு முக்கியமான வேலை உண்டு. ஏனெனில் இத்தூளுக்கே அண்டாசயத்திலுள்ள அண்டங்களை முதிரச் செய்யும் சக்தி உண்டு.

இம் மகரந்தப்பொடி புஷ்பத்திலுள்ள தனிப்பட்ட அங்கமான மகரந்தப்பைகளில் தயாரிக்கப்படுகிறது. இப்பையிலிருந்து வெளிவந்து எம்மார்க்கமாகவேனும் அண்டாசயத்தை யடைந்து அதிலுள்ள அண் டங்களை அடையவேண்டும். இது நடந்தேறிய பிறகே அது தன் வேலை யைச் செய்யக்கூடும்.

மகரந்தப்பையிலிருந்து மகரந்தப்பொடி எவ்வாறு அண்டா சயத்தை அடைகிறதென்று கவனிப்போம்.

மகரந்தப்பொடி முழுவளர்ச்சியை அடைந்ததும் அவை முதிர்ந்து வெடிக்கின்றன. அப்பொழுது உள்ளே நிரம்பியிருந்த மகரந்தப்பொடி நான்கு திசைகளிலும் சிதறுகிறது. அவ்வாறு சிதறும்பொழுது அண்ட கோசத்தின் மேற்பாகமான கீலத்தில் விழுகிறது. அண்டகோசத்தின் இப்பாகம் மற்ற பாகங்களைவிட உயர்ந்தும், எல்லாவற்றிற்கும் நடுவிலும் இருக்கிறது.

அண்டகோசத்தின் பலபாகங்களையும் விளக்கும் படம் ஒன்றை வரையவும். இதில் அண்டகோசத்தின் உன்னத பாகமாகிய கீலத்தை **(Stigma)** கவனிக்கச் செய்யவும். இப்பாகம் பஞ்சுபோல் மிருதுவாக வும் தளர்த்தியாயும் இருக்கிறதென்பதை சில புஷ்பங்களை பிள்ளைகள் கவனித்து அறியச்செய்யவும். தவிரவும் இப்பாகம் எப்பொழுதும் ஈர மாகவே இருக்கிறது. இதற்குக் காரணம் அதன் உட்பாகத்திலிருந்து சதா வெளியே ஓர்வித நீர் கசிந்துகொண்டிருப்பதுதான். இந்நீரை அவர்கள் தொட்டுப்பார்த்து பிசின்போல் இருக்கிறதென்று அறியச் செய்யவும். கீலத்தின் இவ்வாறுன அகன்ற பசைபோன்ற உயர்ந்த அமைப்பு அதன் மேல் விழும் வஸ்துக்களைப் பிடித்துக்கொள்ள ஏற்றதாயிருக்கிறது. இதன் மேல்தான் மகரந்தப்பொடி விழுகிறது. ஒவ்வொரு மகரந்தப்பொடியும் அதன்மேல் விழுந்த உடனே வளர ஆரம்பிக்கிறது. வளரும்பொழுது கீலத்தின் மிருதுவான பாகத்தை பிளந்துகொண்டு செல்கிறது அண்டாசயத்தையும் அதிலுள்ள அண்டங்களையும் மகரந்தப் பொடி சேரும்வரை வளர்ச்சி நிற்பதில்லை. அண்டங்களை அடைந்ததும் ஓர் ஆச்சரியமான சம்பவம் நடைபெறுகிறது. மகரந்தப்பொடி தான் உற்பத்தி செய்துகொண்ட ஓர் நீரை அண்டத்திற்குள் சேரும்படி செய் கிறது. இந்நீர் அண்டங்களுடன் கலந்தபிறகே அவை முற்ற ஆரம்பிக் கின்றன. மகரந்தப் பொடியில் உற்பத்தியாகும் நீர் அண்டங்களுடன்

கலப்பதற்கே கருத்தரித்தல் என்று பெயர். இதற்குப்பின் அண்டங்கள் வெகு வேகமாக முதிர ஆரம்பிக்கின்றன.

மகரந்தப்பொடி கிலத்தை இரண்டுவிதங்களில் அடையலாம். (1) ஓர் புஷ்பத்திலுண்டாகும் மகரந்தப்பொடி அதே புஷ்பத்திலுள்ள கிலத்தை அடையலாம். (2) ஓர் புஷ்பத்திலுண்டாகும் மகரந்தப்பொடி அதே இனத்தைச்சேர்ந்த வேறொரு செடியின் புஷ்பத்திலுள்ள கிலத்தை அடையலாம்.

இவ்விரண்டு விதங்களில் முதல்வகை அவ்வளவு சிலாக்கியமானது அல்ல. இரண்டாம்வகை எல்லாவகைகளிலும் சிறந்ததாகும்.

புஷ்பங்கள் எல்லாம் தம்மைத்தாமே கருத்தரிக்கச் செய்ய முடியாமலிருப்பது

ஒரு தொட்டியில் வளர்ந்து புஷ்பித்திருக்கும் செடியைக் காண்பிக்கவும். அதிலுள்ள புஷ்பங்கள் தொங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை காண்பிக்கவும். இம்மாதிரி புஷ்பங்களை **Pendent flowers** என்று அழைப்பது வழக்கம். இப் புஷ்பங்களிலுள்ள கேசரத்தாள்கள் அண்டகோசத்தைச் சுற்றி வளர்ந்திருப்பதை கவனிக்கச் செய்யவும். அண்டகோசம் கேசரத்தாள்களைவிட நீண்டிருக்கின்றன. இதனால் அண்டகோசத்தின் மேல்பாகமான கிலம் வளைந்து மகரந்தப் பைகளுக்கு கீழே இருக்கிறது. இதனால் மகரந்தப் பொடியானது கிலத்தின்மேல் விழுவது சாத்தியமில்லாமற் போகிறது. இம்மாதிரி வளைந்திருக்கும் கிலாக்கிரத்தையுடைய புஷ்பங்கள் தம்மைத்தாமே வித்து உண்டாகும்படி (அண்டங்கள் முதிரும்படி) செய்யமுடியாது.

செடியின் புஷ்பத்தை மாணவர்களிடம் கொடுத்து அவற்றை நன்கு சோதிக்கும்படி சொல்லவும். இவற்றில் இரண்டுவித புஷ்பங்கள் இருக்கின்றன. ஓர்வகை புஷ்பத்தில் கேசரத்தாள்கள்மட்டிலும் இருக்கின்றன. அண்டகோசம் இல்லை. மற்றொருவகையில் அண்டகோசம் மட்டிலும் இருக்கிறது. இவ்விரண்டு வகை புஷ்பங்களும் ஒன்றுக்குள் ஒன்று வட்டமாக அமைந்திருக்கின்றன. கேசரத்தாள்களும் கிலமும் வெவ்வேறு சமயத்தில் முதிருகின்றன. கிலம் மகரந்தப்பொடியை வாங்கிக்கொள்வதற்கு தயாரா யிருக்கும்பொழுது மகரந்தப்பைகள் முதிராமலும் மகரந்தப்பொடியை உற்பத்திசெய்ய ஆரம்பிக்காமலும் இருக்கின்றன. சில தினங்கள் கழித்து மகரந்தப் பைகள் முதுமையை அடைந்து மகரந்தப்பொடியை உற்பத்தி செய்கின்றன. மகரந்தப்பைகள் தாமாக வெடித்து உள்ளேயுள்ள மகரந்தப்பொடி வெளிவரும்பொழுது கிலம் உபயோகமற்றதாகி விடுகிறது. அதாவது அதன்மேல் விழும் மகரந்தப்பொடி பிரயோஜனமற்றதாகி விடுகிறது. இம்மாதிரி புஷ்பங்களில் அண்டங்கள் முதிர்ந்து வித்தாக வேறு புஷ்பங்களிலிருந்து மகரந்தப் பொடி வரவேண்டும்.

சீராக வரையப்பட்டிருக்கும் படத்தைக்கொண்டாவது, அல்லது பருவகாலமாயிருந்தால் மலர்ந்திருக்கும், புஷ்பத்தையாவது பிள்ளைகளுக்குக் காண்பிக்கவும். இவை பார்வைக்கு இரண்டுவித புஷ்பங்களாயிருந்தாலும் ஒரே செடியினுடையதாகும். இவை இனத்தைச் சேர்ந்த வெவ்வேறு செடிகளில் தோன்றுகின்றன. ஆனால் அவைகளில் சில முக்கிய வித்தியாசங்கள் இருக்கின்றன. ஓர் செடியிலுண்டாகும் புஷ்பத்தில் அதன் அங்கங்களாகிய காம்பு, புறவிதழ், அகவிதழ், கேசரத்தாள், அண்டகோசம் இவற்றில் அண்டகோசம் நீங்கலாக மற்ற பாகங்கள் இருக்கும். அதே செடியின் இனத்தைச் சேர்ந்த வேறு செடியின் புஷ்பத்தில் புஷ்பங்களின் அங்கங்களில் கேசரத்தாள் நீங்கலாக மற்ற பாகங்கள் இருக்கும். அதாவது ஒரே புஷ்பத்தில் கேசரத்தாள், அண்டகோசம் இரண்டும் இருப்பதில்லை. ஆகவே புஷ்பத்தில் உற்பத்தியாகும் மகரந்தப்பொடி தான் தோன்றிய காரணம் முற்றுப்பெறவேண்டுமானால் அப் புஷ்பத்தை விட்டு வேறொரு புஷ்பத்திற்கு அவசியம் போய்த்தீர வேண்டும். அதாவது அண்டங்களை முதிரச் செய்யும் பொருளாகிய மகரந்தத்தூள் வேறொரு புஷ்பத்திலிருந்து கீலத்தை அடையவேண்டுமே தவிர வேறு வழியில் அண்டங்கள் முதிர முடியாது.

இவ்வாறு இயற்கை அமைப்பில் புஷ்பங்கள் தம்மிடத்தில் தோன்றும் மகரந்தப்பொடியினால் தாமே தம் அண்டங்களை முதிரச் செய்யாமல் தடுப்பதற்கு ஏற்ற சாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இம்மாதிரி இன்னும் எண்ணிறந்த வகைகளில் இயற்கை உலகத்தில் ஒவ்வோர் அங்கமும் தன் வேலையை பரிபூரணமாக செய்வதற்கான வழிகள் இருக்கின்றன. அதை நம் பகுத்தறிவிற்கு புலப்படும்படி செய்து கொள்வதே மானிடனின் உயர்ந்த அறிவின் பிரயோஜனமாகும்.

செய்தி திரட்டு

---

1. திருச்செங்கோடு தாலூகா போர்டு ஸ்கூல் ஆசிரியர்களின் சங்கம்

சென்ற 15-12-40-ல் மேற்படி சங்கத்தின் ஸ்தாபிதக் கூட்டம் நடைபெற்றது. சேலம் கோகுலநாத் ஹிந்துமகாஜன ஹைஸ்கூல் தலைமை ஆசிரியரும், ஜில்லா ஆசிரியர் கில்டு காரியதரிசியுமான ஸ்ரீ A. V. சுந்தரேச அய்யர் தலைமை வகித்து, ஆரம்ப ஆசிரியர் யூனியனின் அவசியத்தையும் நோக்கத்தையும் பற்றி விரிவாகக் கூறினார்.

பிறகு சங்கத்தின் நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

---

2. ரெங்கம்பாளையம் ஆசிரியர் சங்கம்

இச்சங்கத்தின் வருஷாந்திர விழா 18-1-41-ல் நடந்தது. ஜில்லா கல்வி அதிகாரி ஜனாப் S. M. அப்துல்லா சாகிப் பகதூர் தலைமை வகித்தார். பொருட்காட்சி ஒன்று தலைவரால் திறந்து வைக்கப்பட்டது.

பிறகு, திருச்செங்கோடு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ உலக ஊழியர் "பண்டை காலக்கணக்காயர்" பற்றியும், எடப்பாடி ஹைஸ்கூல் தமிழாசிரியர் ஸ்ரீ. வீரராகவன் "மேனாட்டில் சிறுவர் இயக்கம்" பற்றியும். திருச்செங்கோடு ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. Regis. சாமிக்கண்ணு பிள்ளை அவர்கள் "ஆசிரியர்களின் கடமை" பற்றியும் விரிவாகப் பேசினார்கள்.

பின்பு, தலைவர் முடிவுரையில் பிற்காலப் பிரஜைகளை ஆசிரியர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருப்பதால் அவர்களை முன்னணியில் கொண்டு வருவது ஆசிரியர்களின் கடமை என்று விளக்கமாய்ப் பேசி முடித்தார்.

---

3. கோடைக்கானல் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் சங்கம், ஊரல்பட்டி

18-1-41-ல் இச்சங்கத்தின் வருஷாந்திர விழா தாண்டிகுடி உயர்தர ஆரம்ப பாடசாலை ஆசிரியர் ஸ்ரீ R. சுந்தர ராஜன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

வருஷாந்தர அறிக்கைக்குப்பிறகு இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன,

(1) மதுரை ஜில்லா போர்டு ஆதீனத்தின்கீழ் அமைக்கப்பட்டு வேலை செய்துவரும் ஆரம்ப ஆசிரியர்களின் தாலூகா யூனியன்களை இணைத்து ஓர் மத்திய ஜில்லா யூனியன் ஸ்தாபித்துக்கொள்ள இப்பொழுது இருக்கும் G. O. 416 Edn-ஐ விரிவுபடுத்தி அனுமதிகொடுக்கவேணுமாய் கல்வி இலாகா அதிகாரிகளை இந்த சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

(2) தாண்டிகுடி உயர்தர ஆரம்ப பாடசாலை ஆசிரியர் ஸ்ரீ. R. சுந்தர ராஜனை யூனியன் செக்ரிடரியாக நியமித்திருக்கிறது.

---

4. சீர்காழி தாலூகா கன்னியாகுடி ஹையர் எலிமெண்டரி பாடசாலை பெற்றோர் மாணவர் சங்கம்

11-1-1941 ல் இச்சங்கத்தின் வருஷாந்தர விழா நடைபெற்றது. ஸ்ரீ பொன்னுசாமி பிள்ளை தலைமை வகித்தார்.

மாணவர்கள் ஐக்கிய நாணயச்சங்கம், சுகாதாரம், கிராம பொருளாதார அபிவிருத்தி முதலியவைகளைப்பற்றி போட்டி பிரசங்கம் செய்தார்கள். தலைமை ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யர் 'தேசபக்தி'யைப் பற்றி திறமையாய் பிரசங்கித்தார்.

பந்தயங்களிலும், வாக்கு வன்மை போட்டியிலும் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

பெற்றோர் சங்கத்தலைவரால் ஆறு தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

---

5. பழனி தாலூகா போர்டு ஸ்கூல் ஆரம்ப ஆசிரிய ஆசிரியைகளின் யூனியன்

26–1-41 ல் இந்த யூனியனின் முதல் ஆண்டுவிழா நடைபெற்றது. மதுரை ஜில்லாபோர்டு உபதலைவர் ஸ்ரீ. கோ. வெங்கடாசலபதி அவர்கள் தலைமை வகித்தார்.

ஸ்ரீ. C. கிருஷ்ண அய்யர் 'ஆரம்ப ஆசிரியர்களும், அவர்கள் குறைகளும்' என்பதைப்பற்றியும், தமிழ் பண்டிதர் ஸ்ரீ. K. S. சுந்தரசாமி அய்யர் 'ஆரம்ப ஆசிரியர்களும் சமூகத்தொண்டும்' என்பதைப் பற்றியும் பிரசங்கம் செய்தனர்.

---

6. இராசிபுரம் தாலூகா திரவியசகாய ஆரம்ப பாடசாலை ஆசிரியர் யூனியன், இராசிபுரம்

26-1-41 ல் சங்கத்தலைவர் ஸ்ரீ. K. பெரியசாமி அய்யர் அவர்கள் தலைமையில் இச்சங்கம் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றியது:—

(1) சென்ற நவம்பரில் கொடுபடவேண்டிய 3வது தவணை கிராண்டு தொகை மற்ற ரேஞ்சுகளில் கொடுபட்டு இந்த ரேஞ்சில் மட்டும் இன்னும் கொடுபடாமலிருப்பதால் அதை சீக்கிரம் கொடுத்து உதவும்படி மேல் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறது.

(2) ஆரம்ப பாடசாலைகள் சரிவர நடைபெறுவதற்காக அவைகளுக்குக் குடிக்கூலிக்காக கிராண்டு கொடுக்கும்படி கல்விச்சட்டத்தைச் சீர்திருத்தும்படி அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(3) இத்தாலூகாவின் நிலைமைக்கு கஷ்டமாயிருப்பதால் வருஷத்தில் வேலைசெய்யும் நாட்களை 220 லிருந்து 200 ஆக ஏற்படுத்திக் கொள்ள அனுமதி கேட்கிறது.

(4) தாங்கள் உதவிக்காக பெற்றோர்களால் நிறுத்திவைத்துக் கொள்ளும் மாணவர்களை வேஸ்டேஜாகக் கருதக்கூடாதென்றும், அதற்கு ஆசிரியரும் மானேஜர்களும் ஜவாப்தாரிகளல்ல என்னும் மேல் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ளுகிறது.

(5) மாதச் சம்பளம் ரூ. 20க்கு பதிலாக மாதச்சம்பளம் ரூ.15ம் அதற்குமேற்பட்டும் வாங்குபவர்களை பிராவிடெண்டு பண்டில் பணம் போட அனுமதிக்கும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

---

(7) திருப்பத்தூர் தாலூகா எய்டெட் ஸ்கூல் ஆரம்ப ஆசிரியர் யூனியன், கண்டனூர்.

இச்சங்கத்தின் இவ்வருஷத்திய முதல் கூட்டம் 26—1—41 ல் ஸ்ரீ P. சுப்ரமணிய அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அச்சமயம் புதுவருஷத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

பிறகு கீழ்கண்ட தீர்மானங்களின்படி மேல் அதிகாரிகளை இச் சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

(1) பாடசாலை வேலை நாட்களை 220 லிருந்து 200 ஆகக் குறைக்கவேண்டும்.

(2) உயர்தர எலிமெண்டரி பாடசாலை எட்டாவது வகுப்பு மாணவர்களுக்கு இப்பொழுது ஏற்படுத்தப்போகும் பரிக்ஷையினல் அனுகூலம் ஒன்றும் இல்லாததால் அதை ரத்து செய்யவேண்டும்.

(3) ஸெகெண்டரி ஸ்கூல் மூன்றும் பாரத்துப் பையன்களுக்கும், உயர்தர எலிமெண்டிரி ஸ்கூல் எட்டாவது வகுப்பு பையன்களுக்கும் பொதுப் பரீக்ஷை வைத்து அதில் தேரியவர்களை நாலாம் பாரத்தில் சேர்த்துக்கொள்ளவேணும்,

(4) கைத்தொழில் கல்விக்காகக் கொடுக்கப்படும் அரை கிராண்டினால் பலன் இல்லையாதலால் மெஷின், ஆயுதம் முதலியவற்றின் செலவுக்காக முழு கிராண்டுத் தொகையையும் அளிக்கவேண்டும்.

(5) மானேஜர், உபாத்தியாயர் இவர்களின் கஷ்ட நிவாரணத்தை உத்தேசித்து மூன்றுமாத கிராண்டு தொகையை சரியான காலங்களில் அளிக்கவேண்டும்.

(6) கிராண்ட் பில் மாற்றுவதற்கு காலதாமதம் ஏற்படாமலிருக்கும்பொருட்டு சப் டிரெஷரிக்கு உடனுக்குடன் தகவல் கொடுக்கவேணும்.

(7) போதனாமுறை பயின்ற, பயிலாத ஆசிரியர்களின் விகிதம் 2 : 1 இருக்கவேண்டும் என்ற G.O. வை ரத்து செய்யவேணும்.

(8) பெண்பாடசாலை இருக்கும் இடங்களில் பெண்களை பையன்கள் பாடசாலையில் பெற்றோர்களின் எழுத்துமூல விருப்பத்தின்பேரில் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கவேணும்.

(9) இந்த யூனியனின் தீர்மானங்களை கல்வி டைரக்டருக்கும் கவர்னரின் ஆலோசனையாளருக்கும் அனுப்ப அனுமதிக்கவேண்டும்.

(10) இச்சங்கத்திற்கு அங்கத்தினர் சந்தா மூன்று மாதத்திற்கு இரண்டு அணா. அதை ஒவ்வொரு கூட்டத்தின்போதும் கொடுத்துவிடவேண்டும்.

Extracts from the Fort St. George Gazette.

Dated January 21, 1941.

Amendment to the rules Relating to recognition and aid to Elementary Schools.

AMENDMENT

Chapter II—Rules for Aid.

In rule 22, the following shall be added at the end, namely :— " The grant will ordinarily be disbursed in four instalments in the months of May, August, November and February."

Amendments to rules relating to the appointment and punishment of officers and servants of local bodies.

AMENDMENT

For Rule 6 of the said rules, the following rule shall be substituted :

Where the Training School Leaving-Certificate of a teacher in a Local Board School is suspended by the Divisional Inspector of Schools or by the Director of Public Instruction, Madras, or is cancelled by the latter, the president of the local board concerned shall suspend such teacher during the period for which his certificate is so suspended or dismiss him, as the case my require. The provisions of rule 5 shall not apply to the suspension or dismissal of a teacher under this Rule. During the period of suspension under this rule, the teacher shall not be entitled to any allowance."

A similar amendment relating to Municipal Schools has also been gazetted.

மதிப்புரை

கதைக்கோவை—பகுதி 1

[பிரசுரகர்த்தர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர் சென்னை.
பக்கங்கள் 504. விலை கிளேஸ் பதிப்பு ரூ. **3—0—0**;
பேதர்வெயிட் ரூ. **3—8—0.**

மயிலாப்பூர் அல்லயன்ஸ் கம்பெனியார் வெளியிட்டுள்ள கதைக்கோவை என்ற புத்தகத்தை நாம் வாசித்து அடைந்த சந்தோஷத்தை சொற்களால் எடுத்துச் சொல்லுவது சுலபமல்ல. தமிழ் நாட்டில் சிறந்து விளங்கும் நாற்பது எழுத்தாளர்கள் தனித்தனியே எழுதிய சிறு கதைகளை ஒருங்கு சேர்த்துத் திரட்டி ஒரு புத்தகமாக வெளிவந்திருக்கும் இக்கதைக் கோவையில் மனிதன் மனதில் தோன்றும் பல்வேறு உணர்ச்சிகளும், மனோபாவங்களும், வாழ்க்கையின் விசித்திரங்களும் சித்தரிக்கப்பட்டுள்ளன.

உண்மையான சம்பவங்களும், உவமைச் சித்திரங்களும் உயரிய முறையில் எடுத்துக்காட்டும் மகாமகோபாத்யாய உ. வே. சுவாமிநாதய்யர், ராஜாஜி, எஸ். வி. வி. போன்ற அனுபவ மிக்க ஆசிரியர்கள் எழுதியுள்ள சிறு கதைகள் படிப்பவர் உள்ளத்தைக் கவரும் என்பதில் சந்தேகமில்லை. கள்ளங்கபடற்ற குழந்தைகளின் மனோபாவங்களைச் சித்தரிக்கும் 'குழந்தையின் உள்ளம்' நக்ஷத்திரக் குழந்தை' போன்ற கதைகளைப் படிக்கும்போது நாமும் குழந்தைகளாகி விடுகின்றோம். சோகத்தின் சிகரம் என்பார்களே, அது 'விடியுமா' 'மழை இருட்டு' என்ற கதைகளின் மூலம் நன்கு வெளியாக்கப் பட்டுள்ளது. ஸ்ரீமதி குகப்பிரியை எழுதிய 'தேவகி' என்னும் கதையிலிருந்து காதலின் மகத்தான சக்தியை அறிகின்றோம். இப்புத்தகத்தில் இவ்விதமாக நவரசங்களையும் தனித்தனியாகவும், ஒன்று சேர்ந்தும் காணக்கூடிய பல கதைகள் உள்ளன.

சிறு கதைகள் எழுதுவது சாதாரண காரியமல்ல. மிகவும் சிரமமான கலை. அவ்வரிய கலை தமிழ் இலக்கியத்தில் இக்காலத்தில் வளர்ச்சிபெற்று விளங்கி வருகின்றது. 'ஒரு சம்பவத்தையோ, ஓர் இடத்தையோ, ஒருகணப் பொழுதையோ, ஓர் ஆத்மாவையோ, அல்லது ஏதோ ஒரு நிகழ்ச்சியால் நினைவூட்டப்பட்ட ஞாபகங்களையோ ஸ்பஷ்டமாகவும், உள்ளது உள்ளபடியே மறக்கமுடியாதபடி அழுத்தத்துடனும் படிப்பவர்களைக் காணச்செய்வதுதான் இக்கலையின் நோக்கம்.' என்று வைத்துக்கொண்டால், இப்புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ள நாற்பது சிறு கதைகளும் இப்புதிய கலையின் ஜீவ கலைகளை நாற்பது வழியில் பிரகாசிக்கச் செய்கின்றன.

இப்புத்தகத்தில் காணப்படும் கதைகளை எழுதிய ஆசிரியர்கள் அனைவரும் தமிழ்நாட்டில் பெயர்பெற்றவர்களே. கதைக்கோவைக்கு ஹிந்து பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஸ்ரீ நா. ரகுநாதன் எம். ஏ., பி. எல்., முன்னுரை எழுதியுள்ளார்.

இப்புத்தகம் சுத்தமாக அச்சிடப்பட்டு அழகாக பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. தமிழர் அனைவரும் வாசிக்கவேண்டிய புத்தகம். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும், புத்தக சாலைகளிலும் இருக்கவேண்டிய புத்தகம்.

இக்காலத்தில் நல்ல தமிழ் நூல்களை அச்சிட்டு தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்துவரும் அல்லயன்ஸ் கம்பெனியார் இவ்வளவு அழகான புத்தகத்தை வெளியிட்டிருப்பது மிகவும் போற்றத்தக்கதாகும்.

"ஆரம்பக் கல்வி புகட்ட பெண்களுக்கு தனிப் பள்ளிக்கூடங்கள் அவசியமா?"

"சர்க்கார் கவனிக்குமா?" "ஆசிரிய யூனியன்கள் யோசிக்குமா?"

ஐயா, உலகத்திலுள்ள தேசங்கள் யாவும் நாகரீகத்தில் முதன்மை பெறமுயற்சிக்கின்றன. ஆனால் நமது தேசம் வெறும் வார்த்தையளவிலேயே நின்று விடுகின்றது. ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானால் அதில் படித்தவர்களின் தொகை அதிக மிருக்கவேண்டும். இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு நம் தேசத்தை எடுத்துக்கொண்டால், அது இவ்விஷயத்தில் மிகவும் பாபம் செய்திருக்க வேண்டுமென்று கூறவேண்டியிருக்கிறது. மொத்த ஜனத்தொகையில் பாதியாயுள்ள ஸ்திரீகளில் 100க்கு 3 பேர் கூட படிப்பதாகச் சொல்ல முடியவில்லை. ஆண்களிலும் 100க்கு 7 பேர்தான் படிப்பதாகச் சொல்லலாம். இப்படியாக படிக்காதவர்களின் தொகை 100 க்கு 90 என்று துணிந்துகூறலாம்.

திருத்தப்பட்ட விதிகளில் பெண்களின் சங்கியை அதிகமில்லாத காரணத்திற்காக ஆண்பள்ளிக்கூடங்களின் அங்கீகாரம் ரத்து செய்யலாமென்றிருக்கிறது. எனவே, சட்டம் உபயோகப்படுத்தப்படின் அந்த பிரதேசத்தில் படித்துவரும் ஆண்குழந்தைகளும் படிப்பை இழக்க நேரிடும். பெண் கல்வி அபிவிருத்தியடைய வேண்டுமெனும் சர்க்காரின் நோக்கம் வரவேற்கத் தகுந்ததே யென்றாலும் சட்டம் நோக்கத்தின் எல்லையைக் கடந்து நிற்கிறது. எனவே, பெண் கல்வி யபிவிருத்தியடையவேண்டி செய்த சட்டத்தால் ஆண் கல்வி குறைந்துபோகும் நிலைமை ஏற்பட்டு விடலாம். சிலர், ஆண் கல்வியை இழக்க இஷ்டப்படாத காரணத்திற்காகவேனும், பெண் கல்வியை விருத்திசெய்ய முன் வருவார்கள் என்று கூறலாம். ஆண் கல்வியையே அபிவிருத்தி செய்ய முன் வராதவர்கள் நொண்டிக்குதிரையின் உதாரணத்திற்குத்தான் ஆளாவார்கள் என்று நாம் உணரவேண்டும். ஆகவே, இரண்டிற்கும் சீர்திருத்தம் தேவையென ஏற்படுகிறது.

இதற்கு, முதலாவதாக சர்க்கார், பெண் பள்ளிக்கூடம், ஆண் பள்ளிக்கூடம் என்று பிரிப்பதை தவிர்க்க வேண்டும். இதுதான் பெண் கல்வியை விருத்தி செய்யச்செய்யும் முதல் சீர்திருத்தமாகும். இந்தப் பிரிவினை பெரும்பாலும் ஆரம்பப் படிப்பில்தான் காண்கிறது. மேல் வகுப்புகளில் (செகண்டரி) கல்வி பயிலும் மாணவிகள் தம் வயது வந்த பருவத்தில் சகஜமாகவே மற்ற மாணவர்களுடன் சேர்ந்து கல்வி பயிலுகின்றனர். ஆரம்பக் கல்வியில் பெண் கல்வி வேறு, ஆண் கல்வி வேறு என்று அதிகமான வித்யாசம் இல்லை. சில பாடங்கள் மாறுபட்டாலும் அவைகளை (Special periods) தனி வகுப்புகள் மூலம் போதிக்கலாம். இதே சமயத்தில் ஆண் குழந்தைகளுக்கும், அவர்களுத் தேவையான

படிப்பை போதிக்கலாம். வாழ்க்கையில் ஆண், பெண், இருவரது சுக துக்கங்களும் ஒன்றே யாதலாலும், ஆரம்பக் கல்வியில் அதிக வித்தியாசமில்லை யாதலாலும், ஸ்திரீகளும் படிக்கவேண்டும், சம சுதந்திரமடைய வேண்டுமென்று கூறும். இந்நாளில், பெண் பள்ளிக்கூடம், ஆண் பள்ளிக்கூடம் என்று பிரிக்க வேண்டிய அவசியமில்லை. ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் ஆரம்ப முதலே ஒன்று சேர்ந்து வாசிப்பதால், அதுவும் ஒருவர் மேற்பார்வையிற் பழகுவதால், இரு குழந்தைகளிடையேயும் சகோதரத்வமும், உண்மையான அன்பும், (ஆதிதிராவிடர்களும் சேர்ந்து வாசிப்பதால் ஜாதிவித்யாசம் இல்லாமற் போகுமென்று எதிர்பார்ப்பது போல்) பெருகும். இதுவே அவர்களது வருங்கால வாழ்க்கையை நாகரீகமாகவும், ஒற்றுமையுள்ளதாகவும் செய்யும்.

மேலும் முதல் வகுப்பை நடத்தப் பெண் ஆசிரியர்கள்தான் திறமை வாய்ந்தவர்கள். குழந்தையின் ஜனனம் முதல் பள்ளிக்கு வரும்வரை ஸ்திரீகளே குழந்தையுடன் அதிகம் பழகுவர்கள் எனவே படிப்புக்காக வந்த இளம் குழந்தையுடன் பழக தாய்மார்களே வல்லவர்கள். குழந்தைகளின் குணகுணங்களை அவர்களே தெரிந்து நடக்கக்கூடியவர்கள். ஆகவே, முதல் வகுப்புக்கு முக்யமாக உபாத்தியாயினிகளை நியமித்து, பெண் பள்ளிக்கூடங்களையும் ஆண் பள்ளிக்கூடங்களுடன் சேர்த்து விட்டால், ' முதல் வகுப்பில் தேர்ச்சிக் குறைவு,' எனும் நிரந்தரமான பெயரும் மறைபட்டுப் போகும். சர்க்காருக்கும் இரண்டு விதமான பள்ளிகள் நடத்துவதால் ஏற்படும் அதிகப்படியான சிலவுகள் குறைவு படும்.

உபாத்தியாயர்கள் உபாத்தியாயினிகளுடன் சேர்ந்து வேலை செய்வது கூடாது எனலாம். ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால், இருவருடைய உழைப்பும் ஒன்று சேர்ந்தால்தான் அபிவிருத்தி ஏற்படும். எத்தனையோ ஆபீஸுகளிலும், ஆஸ்பத்திரிகளிலும், ஸ்திரீகள் புருஷர்களுடன் கலந்து வேலை செய்கிறார்கள். கல்வியறிவில்லா தொழிலாளர்களும் தங்கள் தொழில் துறைகளில் வித்யாசமில்லாது ஒத்துழைக்கிறார்கள். அவர்களைவிட ஆசிரியர்கள் அறிவிற் குறைந்தவர்களா? ஆணும் பெண்ணும், ஒன்றாக ஒரு துறையில் ஒத்துழைப்பதால், சகோதர வாஞ்சைதான் மேலிடும். இது காதல் வாழ்க்கைக்கு கட்டைபோட்டு விடும், என்பது என் துணிபு. மேலும், அவரவர் கடமையை பிறருக்கு எடுத்துச் சொல்லும், ஆசிரியர்கள் கூடவா நம்பத்தகுந்தவர்களல்லர்? ஆகவே, பெண் கல்வி அதிகம் பரவவேண்டுமென்று விரும்பும் சர்க்கார் என் தாழ்ந்த யோசனையைக் கையாளுவார்களா ?

இதன்றி, ஆரம்ப ஆசிரிய யூனியன்களும் இந்த யோசனையை தீர்க்காலோசனை செய்து, தீர்மானங்கள் மூலம் சர்க்காருக்கு அனுப்புவார்களென்றும் நம்புகிறேன்.

எரும்பூர்
1—12—40. } குருஸாமி ஐயர்.

பத்திராதிபர் குறிப்பு

கல்வி அறிக்கை

1939—40 வருஷத்திய கல்வி சம்பந்தமான அறிக்கையிலிருந்து சில முக்கிய விவரங்களை சில நாட்களுக்கு முன் பத்திரிகைகளில் கண்டோம். அவையாவன :—(1) ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் சங்கியை சற்று குறைந்தபோதிலும் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளின் சங்கியை அதிகரித்துள்ளது. (2) மூடப்பட்ட பள்ளிக்கூடங்கள் சரியாய் உழைத்துவராத ஓராசிரியப் பள்ளிக்கூடங்கள். (3) பள்ளிக்கூடங்களில் படிக்கும் பெண் குழந்தைகளின் சங்கியை சென்ற வருஷத்தை விட ஏழுசத வீதம் அதிகரித்துள்ளது. (4) புதிய பாட திட்டத்தில் தொழில் சம்பந்தமான பாடங்களும் சேர்க்கப்பட்டிருப்பதால் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலுள்ள படிப்பு முன்னேற்ற மடையக்கூடும். (5) ஆசிரியர்களுடைய சர்வீஸ் கண்டிஷன் சம்பந்தமாக தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த அறிக்கை சம்பந்தமாக பாராட்டுவதுபோன்று தலைவர் குறிப்பு ஒன்று சென்னையிலுள்ள முக்கிய தினசரியில் வெளிவந்துள்ளது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். இக் குறிப்பு கல்வி மேம்பாடடைவதாக நம்பி அதிகாரிகளை மெச்சுவதாக நினைப்பதற்கில்லை. அதிகாரிகள் அமுலில் ஆண்டுவரும் முறை காலத்திற்கு ஏற்றதென்றும். அம் முறையைத் தொடர்வதாலேயே ஆரம்பக் கல்வி நிச்சயமாக மேம்பாடு அடையக்கூடும் என்றும் அப் பத்திரிகை நம்புவதாக நாம் நினைப்பதற்கில்லை. ஜன சங்கியை ஐந்நூறுக்கு மேலுள்ள பள்ளிக்கூடங்களே இல்லாத கிராமங்கள் சுமார் 2,800 என்பதிலிருந்தே ஆரம்பக் கல்வியை முன்னேற்றமடையச்செய்ய தற்கால முறை தகுந்ததென எவரும் நினைக்க மாட்டார்கள். ஆசிரியர்களுடைய சர்வீஸ் கண்டிஷன் சம்பந்தமாகவும் தகுந்த முறையை அனுசரித்ததாக எவரும் கொள்ளமாட்டார்கள்.

சுமார் பத்து வருஷமாக பள்ளிக்கூட சங்கியை குறைவதயே கல்வியின் முன்னேற்றத்திற்கு அறிகுறி என்று சொல்லுவது வழக்கமாகி வருகிறது. சங்கியை குறைவது உபயோகமற்ற பள்ளிக்கூடங்கள் மூடுபடுவதாலேயே ஏற்படுவதால் கல்வியின் முன்னேற்றத்தைப்பற்றி ஜனங்கள் கவலைப்படவேண்டியதில்லை என்று தைரியம் சொல்லுகிறார்கள். இதற்குத் தகுந்த ஆதாரம் அறிக்கைகளில்லை. பள்ளிக்கூடப் பிள்ளைகள் அதிகரிப்பதோடு பள்ளிக்கூட சங்கியையும் அதிகரிப்பது தவறாகாது.

மேலும், சென்னை மாகாணத்திலேயே பள்ளிக்கூடம் மூடும் முறை மும்முரமாக இருப்பதாக இந்தியா கவர்ண்மெண்டு அறிக்கையிலும் நாம் காண்கிறோம். சரியாக இல்லாத பள்ளிக்கூடங்களை மூடுவதைப்பற்றி எவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். ஓராசிரியர் பள்ளிக்கூடங்களை பல ஆசிரிய முழுப் பள்ளிக்கூடங்களாக மாற்றுவது சரி என்றும் ஞாயமென்றும், உபயோகமில்லாத பள்ளிக்கூடங்களை மூடுவது

அவசியம் என்கிற கட்சி சரியாக இருக்கலாம். ஆனால், மூடப்பட்ட பள்ளிக்கூடங்கள் உபயோகமற்ற பள்ளிக்கூடங்களென நினைப்பது சரியல்ல.

தற்கால முறை தகுந்ததென அதிகாரிகள் நினைப்பதை நாம் குற்றம் கூறவில்லை. அறிக்கையிலுள்ள விஷயங்களைப்பற்றி வேறுவிதமான அபிப்பிராயம் கொள்ளுவதற்கும் இடம் இருக்கிறது. பள்ளிக்கூடங்களை மூடுவதுடன் வேண்டிய இடங்களில் தகுந்த பள்ளிக்கூடங்களை ஸ்தாபிப்பதும் அவசியம் என்று அனேகர் நினைக்கிறார்கள்.

மேலும், பாட திட்டம் புதுப்பிக்கப்பட்டதாலேயே பள்ளிக்கூடப்படிப்பு ஸாரமுள்ளதாகிவிடும் என்று தற்காலம் பள்ளிக்கூட நிலையை அறிந்தவர்கள் சுலபமாக நம்பமாட்டார்கள். தொழில் சம்பந்தமான படிப்பு மிகச் சில பள்ளிக்கூடங்களிலாவது அனுஷ்டானத்திற்கு வந்துள்ளதா என நாம் அறிய விரும்புகிறோம்.

சர்வீஸ் ரிஜிஸ்தரை அதிகாரிகள் அமுலுக்குக் கொண்டுவந்தது மெச்சத்தக்கதே. ஆயினும் காரியத்தில் பலன் ஏற்பட்டதாக நாம் நினைப்பதற்கில்லை. (Pro Rata Cut) என்கிற வெட்டு வருஷா வருஷம் ஏற்படுவதால் ஆசிரியர்களுக்குக் கிடைக்கக்கூடிய கிராண்டு எதிர்பாராதபடி மிகவும் குறைந்து விடுகிறது. தங்களுடைய கிராண்டு குறைவதைப் பற்றி ஆசிரியர்கள் புகார் செய்வதில் பயனில்லை என்று தென்னிந்திய ஆசிரிய சங்கத்தின் கோஷ்டிக்கு ஆக்டிங் டைரக்டர் பணமில்லாத கஷ்டத்தைப்பற்றி விவரமாகச் சொல்லும்போது கூறினார். இந்த ஆரம்பக் கல்வி சம்பந்தமாக கல்வி அதிகாரிக்குத் தென்னிந்திய ஆசிரிய சங்க கோஷ்டியார் ஓர் விரிவான விண்ணப்பம் தயார்செய்து கொடுத்தார்கள். அந்த விண்ணப்பமானது தற்கால முறை கல்வியின் முன்னேற்றத்திற்கு சாதகமாய் இருக்க முடியாதென்றும் அந்த முறையை பரிசீலனை செய்வது அவசியம் என்றும் வற்புறுத்தியுள்ளது.

மேலே கூறிய காரணங்களால் பொது ஜனங்களும் தலைவர்களும் கல்வியின் முன்னேற்றத்திற்கு எவ்வாறு தற்கால முறையை மாற்ற வேண்டும் என்கிற விஷயத்தை சிரத்தையுடன் கவனிக்கவேண்டியது அவசியம். அத்துடன் ஆரம்பக் கல்விக்கு அவசியமான மூலதிரவியம் கண்டு பிடிப்பதையும் அதிகாரிகளும் தலைவர்களும் கவனித்தல் வேண்டும். தவிர, ஸ்தலஸ்தாபனப் பள்ளிக்கூடங்களிலும் ஆசிரியர்களின் நிலைமை திருப்தியாக இல்லை என்று நிச்சயமாகச் சொல்லலாம். சம்பளத்தில் வெட்டு, ஆசிரியர்களை வேலையைவிட்டு நீக்குதல், பள்ளிக்கூடங்களை மூடுதல், முதலிய உபாயங்களை ஜில்லாபோர்டுகள் இடத்திற்கு ஏற்றபடி கையாண்டு வருகிறார்கள். ஆரம்பக் கல்வியின் நிலை உயரவேண்டுமானால் தாமதமின்றி அதுஸம்பந்தமான பாலிஸி, பணதிட்டம், புரோக்கிராம், நிர்வாகம் முதலியவற்றை நன்றாக ஆராய்ந்து வருங்காலத்திற்கு ஏற்ற திட்டத்தைத் தயாரிக்க உசிதமான கம்மிட்டி ஒன்றை நியமிப்பது மிக்க அவசியம்.